**அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.**

**முதல் பருவம் ஆறாம் வகுப்பு (2020 - 2021)**

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

# இயல் - 1

## தமிழ் எழுத்துக்களின் வகை தொகை

**தமிழ் இலக்கணம்**
**ஐந்து** வகைப்படும்

1. எழுத்து இலக்கணம்
2. சொல் இலக்கணம்
3. பொருள் இலக்கணம்
4. யாப்பு இலக்கணம்
5. அணி இலக்கணம்

**எழுத்து இலக்கணம்**

- எண்
- பெயர்
- பிறப்பு
- மாத்திரை

**எழுத்து வடிவங்கள்**

- ஒலி வடிவம்
- வரி வடிவம்

**தமிழ் எழுத்துகள் - 247**

| | | | |
|---|---|---|---|
| 1. | உயிர் எழுத்துகள் | = | 12 |
| 2. | மெய் எழுத்துகள் | = | 18 |
| 3. | உயிர்மெய் எழுத்துகள் | = | 216 |
| 4. | ஆய்த எழுத்து | = | 1 |
| | **தமிழ் எழுத்துகள்** | | **247** |

இயல் : 1-1

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## முதல் பருவம் ஆறாம் வகுப்பு (2020 - 2021)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

**உயிர் எழுத்துகள் (12)**
அ முதல் ஔ வரை
இரு வகைப்படும்

| குறில் (5) ஒரு மாத்திரை | நெடில் (7) இரண்டு மாத்திரை |
|---|---|
| அ, இ, உ, எ, ஒ | ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ |

**மெய் எழுத்துகள் (18)**
மூன்று வகைப்படும்

| வல்லினமெய் (6) அரை மாத்திரை | இடையினமெய் (6) அரை மாத்திரை | மெல்லினமெய் (6) அரை மாத்திரை |
|---|---|---|
| க், ச், ட், த், ப், ற் | ய், ர், ல், வ், ழ், ள் | ங், ஞ், ண், ந், ம், ன் |

**உயிர் மெய் எழுத்துகள் (216)**
இரு வகைப்படும்
90 + 126 = 216

| உயிர்மெய்க்குறில் 18×5=90 எழுத்துகள் | உயிர்மெய் நெடில் 18×7=126 எழுத்துகள் |
|---|---|
| க் + அ = க | க் + ஆ = கா |
| க் + இ = கி | க் + ஈ = கீ |
| க் + உ = கு | க் + ஊ = கூ |
| க் + எ = கெ | க் + ஏ = கே |
| - | க் + ஐ = கை |
| க் + ஒ = கொ | க் + ஓ = கோ |
| - | க் + ஔ = கௌ |
| ஒரு மாத்திரை | இரண்டு மாத்திரை |

| ஆய்த எழுத்து - 1 | ஃ அரை மாத்திரை |
|---|---|

இயல் : 1-2

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 2

## முதலெழுத்தும் சார்பெழுத்தும்

**எழுத்துகள் வகைகள்**
(இரண்டு வகைப்படும்)

- முதல் எழுத்து
- சார்பு எழுத்து

**முதல் எழுத்துகள் (30)**
(இரு வகைப்படும்)
12 + 18 = 30

- உயிர் எழுத்துகள் (12)
- மெய் எழுத்துகள் (18)

**சார்பு எழுத்துகள்**
(பத்து வகைப்படும்)

1. உயிர்மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலிகரம்
6. குற்றியலுகரம்
7. ஐகாரக் குறுக்கம்
8. ஔகாரக் குறுக்கம்
9. மகரக் குறுக்கம்
10. ஆய்தக் குறுக்கம்



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## உயிர்மெய் = 216

1. மெய் + உயிர் = உயிர்மெய்
2. உயிரும் மெய்யும் சேர்ந்த ஒலிவடிவம்
3. வரிவடிவம் = மெய்யெழுத்தை ஒத்திருக்கும்
4. மாத்திரை = உயிர் எழுத்தை ஒத்திருக்கும்
5. முதலெழுத்தைச் சார்ந்து வருவதால் சார்பெழுத்து ஆகும்

## ஃ ஆய்தம்

1. மூன்று புள்ளிகள் = தனித்த வடிவம்
2. முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை
3. நுட்பமான ஒலிப்பு முறை
4. தனக்கு முன் குறிலும், தனக்குப்பின் வல்லின உயிர்மெய்யும் பெற்று இடையில் வரும். எ.கா : எஃகு
5. தனித்து இயங்காது
6. உயிரையும் மெய்யையும் சார்ந்ததால் சார்பெழுத்து ஆகும்

இயல் : 2-2

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## முதல் பருவம் ஆறாம் வகுப்பு (2020 - 2021)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### மொழி முதல் எழுத்துகள்

(சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துகள்)

| மொழி முதல் எழுத்துகள் முதலில் வரும் எழுத்துகள் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அம்மா | ஆடை | இலை | ஈகை | உடல் | ஊக்கம் | எழு | ஏடு | ஐந்து | ஒளி | ஓடம் | ஔவை | 12 |
| கலை | கால் | கிளி | கீரை | குயில் | கூத்து | கெண்டை | கேள்வி | கைப்பிடி | கொடு | கோடை | கௌதாரி | 12 |
| ஙனம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 |
| சந்தை | சாறு | சிரிப்பு | சீற்றம் | சுரை | சூடு | செக்கு | சேவல் | - | சொல் | சோறு | - | 10 |
| ஞமலி | ஞாலம் | - | - | - | - | ஞெகிழி | - | - | ஞொள்குதல் | - | - | 04 |
| தந்தை | தாய் | தினை | தீமை | துணி | தூண் | தென்றல் | தேன் | தையல் | தொண்டை | தோடு | தௌவை | 12 |
| நன்மை | நாரை | நிலம் | நீர் | நுங்கு | நூல் | நெல் | நேர்மை | நைதல் | நொச்சி | நோக்கம் | நௌவி | 12 |
| பல் | பால் | பிடி | பீடு | புகழ் | பூமி | பெண் | பேச்சு | பையன் | பொன் | போர் | பௌத்தர் | 12 |
| மலர் | மாலை | மின்னல் | மீன் | முகம் | மூன்று | மெய் | மேனி | மையம் | மொழி | மோசடி | மௌவல் | 12 |
| யவனர் | யானை | - | - | யுகம் | யூகி | - | - | - | - | யோகம் | யௌவனம் | 06 |
| வளை | வாய் | விண் | வீடு | - | - | வெள்ளி | வேல் | வையம் | - | - | வௌவால் | 08 |
| | | | | | | | | | | மொத்தம் | | 101 |

இயல் : 3-1

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 3

## மொழி முதல் இறுதி எழுத்துகள்

| மொழிக்கு முதலில் வராத எழுத்துகள் (சொல்லுக்கு முதலில் வராத எழுத்துகள்) | | |
|---|---|---|
| 1 | மெய் எழுத்துகள் | 18 |
| 2 | ட,ண, ர, ல, ழ,ள,ற,ன = உயிர்மெய் வரிசைகள் | 96 |
| 3 | ஆய்த எழுத்து - ஃ | 01 |
| 4 | ஙகர வரிசையில் | 11 |
| 5 | சகர வரிசையில் | 02 |
| 6 | ஞகர வரிசையில் | 08 |
| 7 | யகர வரிசையில் | 06 |
| 8 | வகர வரிசையில் | 04 |
| | **மொழிக்கு முதலில் வராத மொத்த எழுத்துகள்** | **146** |



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## முதல் பருவம் ஆறாம் வகுப்பு (2020 - 2021)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### மொழி இறுதி எழுத்துகள்

(சொல்லுக்கு இறுதியில் வரும் எழுத்துகள்)

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | மெய் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | வாழ்க | பூங்கா | பாங்கி | புகீ | பழகு | புகூ | - | இங்கே | தங்கை | - | எங்கோ | கௌ | - | 10 |
| ச் | உச | காசா | பசி | மூசீ | பசு | மூசூ | - | சே | பசை | - | சோ | - | - | 09 |
| ஞ் | உரிஞ | உரிஞா | உரிஞி | உரிஞீ | உளிஞு | உரிஞூ | - | - | அஞ்ஞை | - | - | - | உரிஞ் | 08 |
| ட் | கட்ட | கடா | இடி | மடீ | பட்டு | படூ | - | * | படை | - | * | - | - | 09 |
| ண் | மண்ண | கண்ணா | கண்ணி | உணீ | கணு | கண்ணூ | - | பெண்ணே | கண்ணை | - | பெண்ணோ | - | ஆண் | 10 |
| த் | தந்த | போதா | மதி | தீ | பந்து | தூ | - | - | தந்தை | - | அந்தோ | - | - | 08 |
| ந் | பொருந | நா | - | நீ | - | - | - | நே | நை | நொ | நோ | - | வெரிந் | 08 |
| ப் | என்ப | அப்பா | தம்பி | பீ | கம்பு | பூ | - | பே | பெதும்பை | - | போ | - | - | 09 |
| ம் | கம | ஆன்மா | அம்மி | மீ | செம்மு | - | - | அம்மே | ஆமை | - | - | - | மரம் | 08 |
| ய் | செய | காயா | - | - | - | கொய்யூ | - | - | ஐயை | - | ஐயோ | - | தாய் | 06 |
| ர் | வர | வாரா | பரி | குரீ | கரு | வெரூ | - | - | நாரை | - | மலரோ | - | வேர் | 09 |
| ல் | பல | பலா | வலி | வலீ | வலு | கொல்லூ | - | வல்லே | கலை | - | - | - | கால் | 09 |
| வ் | உவ | மூவா | செல்வி | வீ | கதவு | - | - | வே | வை | - | நிலவோ | வெள | தெவ் | 10 |
| ழ் | தொழ | விழா | நாழி | வாழீ | ஏழு | ஏழூ | - | - | மழை | - | - | - | கீழ் | 08 |
| ள் | உள | கொள்ளா | வெள்ளி | குளீ | உளு | எள்ளூ | - | - | களை | - | - | - | முள் | 08 |
| ற் | கற்ற | கன்றா | உறி | உளீ | ஆறு | உறூ | - | - | கற்றை | - | எற்றோ | - | - | 08 |
| ன் | என | கனா | பனி | தேனீ | முன்னு | துன்னோ | - | என்னே | அன்னை | - | அவனோ | - | மன்னன் | 10 |
| | | | | | | | | | | | | மொத்தம் | | 147 |

* - மேல் வகுப்பில் தெரிந்துகொள்வீர்

இயல் : 3-3

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## மொழி இறுதியில் வராத எழுத்துகள்

(சொல்லுக்கு இறுதியில் வராத எழுத்துகள்)

| | |
|---|---|
| 1. உயிர் எழுத்துகள் (உயிரளபெடைத் தவிர்த்து) | : 12 |
| 2. ஆய்த எழுத்து – ஃ | : 01 |
| 3. க், ஞ், ச், ட், த், ப், ற் – வல்லினமெய் | : 06 |
| 4. ங் – மெல்லினமெய் | : 01 |
| 5. ங – வரிசை எழுத்துகள் | : 12 |
| 6. எகர வரிசையில் கெ முதல் னெ முடிய | : 18 |
| 7. ஒகர வரிசையில் நொ தவிர்த்து | : 17 |
| மொத்தம் | 67 |

## சொல்லின் இடையில் வரும் எழுத்துகள்

1. மெய் எழுத்துகள்
2. உயிர்மெய் எழுத்துகள்
3. ஆய்த எழுத்து

இயல் : 3-4

# இயல் - 1

## நால்வகைச் சொற்கள்

**சொல்**

| **ஓர் எழுத்து** தனித்து வந்து **பொருள்** தருவது சொல் | **பல எழுத்துகள்** தொடர்ந்து வந்து **பொருள்** தருவது சொல் |
|---|---|
| ஈ, பூ, நீ, கோ, மை | கல், கடல், தங்கம், எழுது |

**இலக்கண வகை சொற்கள்**
(நான்கு வகைப்படும்)

| பெயர்ச்சொல் | வினைச்சொல் | இடைச்சொல் | உரிச்சொல் |
|---|---|---|---|
| **பெயரைக்** குறிக்கும் சொல் | **செயலைக்** குறிக்கும் சொல் | **பெயர்ச் சொல்**லுக்கும் வினைச் சொல்லுக்கும் **இடையில்** வரும் சொல் | **பெயர்ச் சொல்**லுக்கும் வினைச் சொல்லுக்கும் **உரிமையாக** வரும் சொல் |
| பாரி, பள்ளி, காலை, கண், நன்மை, படித்தல் | வா, படி, எழுது, வரை | **உம்** – நீ**யும்** நா**னும்**<br>**மற்று** - **மற்**றொருவர்<br>**ஐ** – திருக்குற**ளை** | **மா** - **மா**நகர்<br>**உறு** - **உறு**பசி<br>**தவ** - **தவ**முனிவர் |

இயல் : 1-1

# இயல் - 2

## பெயர்ச்சொல்
(ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல்)

**பெயர்ச்சொல்**
(ஆறு வகைப்படும்)

| | |
|---|---|
| **பொருட்பெயர்** | பொருளைக் குறிக்கும் பெயர் – மரம், புறா, நாற்காலி |
| **இடப்பெயர்** | இடத்தைக் குறிக்கும் பெயர் – பள்ளி, தெரு, வேலூர் |
| **காலப்பெயர்** | காலத்தைக் குறிக்கும் பெயர் – நாள், தை, டிசம்பர் |
| **சினைப்பெயர்** | உறுப்பைக் குறிக்கும் பெயர் – கை, கண், இலை |
| **பண்புப் பெயர்** | பண்பைக் குறிக்கும் பெயர் வட்டம் செம்மை நன்மை |
| **தொழிற்பெயர்** | தொழிலைக் குறிக்கும் பெயர் – படித்தல், ஆடுதல், உழுதல் |



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## மூன்றாம் பருவம் ஆறாம் வகுப்பு (2020 - 2021)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

**அறுவகைப் பெயர்ச்சொற்களுக்கான சான்று**களைத் தொடரில் அமைத்து எழுதுவோம்

காவியா **புத்தகம்** படித்தாள்

**பொருட்பெயர்**



காவியா **மாலை**யில் விளையாடினாள்

**காலப்பெயர்**



காவியா **இனிமை**யாக பேசுவாள்

**பண்புப்பெயர்**





காவியா **பள்ளி**க்குச் சென்றாள்

**இடப்பெயர்**



காவியா **தலை** அசைத்தாள்

**சினைப்பெயர்**



காவியாவுக்கு **நடனம்** ஆடுதல் பிடிக்கும்

**தொழிற்பெயர்**

இயல் : 2-2

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## மூன்றாம் பருவம் ஆறாம் வகுப்பு (2020 - 2021)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### பெயர்ச்சொற்கள்

நம் முன்னோர்கள் இரு வகைப்படுத்தினர்

#### இடுகுறிப்பெயர்

நம்முன்னோர்கள் **பெயரிட்டு** வழங்கிய பெயர்கள்

**மண், மரம், காற்று**

##### இடுகுறிப் பொதுப்பெயர்

ஒரு தன்மை உடைய எல்லாப் பொருள்களையும் பொதுவாகக்குறிப்பது

மரம், காடு

##### இடுகுறிச் சிறப்புப்பெயர்

குறிப்பாக ஒரு பொருளை மட்டும் குறிப்பது

மாமரம், கருவேலங்காடு

#### காரணப்பெயர்

நம்முன்னோர்கள் **காரணம் கருதி** வழங்கிய பெயர்கள்

**பறவை, நாற்காலி, கரும் பலகை**

##### காரணப் பொதுப்பெயர்

குறிப்பிட்ட காரணமுடைய எல்லாம் பொருளையும் பொதுவாகக் குறிப்பது

பறவை, அணி

##### காரணச் சிறப்புப்பெயர்

காரணமுடைய எல்லாப் பொருள்களுள் ஒன்றை மட்டும் சிறப்பாகக் குறிப்பது

வளையல், மரங்கொத்தி

இயல் : 2-3

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 3

## அணி இலக்கணம்

(அணி = அழகு)

**1. இயல்பு நவிற்சி அணி (அல்லது) தன்மை நவிற்சி அணி**

ஒரு பொருளின் **இயல்பை உள்ளது உள்ளபடியே அழகுடன் கூறுவது** இயல்பு நவிற்சி அணி ஆகும்.

எ.கா :

**தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு - அங்கே**
**துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி**
**அம்மா என்குது வெள்ளைப்பசு - உன்**
**அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி**
**நாவல் நக்குது வெள்ளைப்பசு - பாலை**
**நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி**
– கவிமணி தேசிக விநாயகனார்

இப்பாடலில் கவிஞர் பசுவும் கன்றும் ஒன்றுடன் ஒன்று கொஞ்சி விளையாடுவதை இயல்பாக எடுத்துக் கூறியுள்ளார், எனவே இஃது **இயல்பு நவிற்சி அணி** ஆகும்

**2. உயர்வு நவிற்சி அணி**

ஒரு பொருளின் **இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது** உயர்வு நவிற்சி அணி ஆகும்

எ.கா :

**விண்மீன்களைக் கேட்டல்**
**அண்ணன்கள் எல்லாம்**
**பறித்துப்பறித்துத் தருவார்கள்! நான்**
**வானவில் கேட்டால்**
**ஏணியில் ஏறி**
**ஒடித்து ஒடித்துத் தருவார்கள்**
**தங்கை எனக்காக**
**ஊரைத் தருவார்கள் - தங்கத்**
**தேரையும் தருவார்கள்**

விண்மீன்களைப் பறிக்கவோ, வானவில்லை ஒடிக்கவோ முடியாது. தன்மேல் உள்ள அன்பின் மிகுதியால் தான் எதைக் கேட்டாலும் என் அண்ணன்கள் தருவார்கள் என்பதை ஒரு தங்கை சொல்வதாக அமைத்திருக்கும் இப்பாடலில், கவிஞர் இயற்கைக்கு மாறாக உயர்த்திக் கூறியுள்ளார். எனவே, இது **உயர்வு நவிற்சி அணி** ஆகும்.



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் -1

## இன எழுத்துகள்

இன எழுத்துகள் ஒற்றுமை

- ஒலிக்கும் முயற்சி
- பிறக்கும் இடம்

### உயிர் இன எழுத்துகள்

| நெடில் | | குறில் |
|---|---|---|
| ஆ | ↔ | அ |
| ஈ | ↔ | இ |
| ஊ | ↔ | உ |
| ஏ | ↔ | எ |
| ஐ | ↔ | இ |
| ஓ | ↔ | ஒ |
| ஔ | ↔ | உ |



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## இரண்டாம் பருவம் ஆறாம் வகுப்பு (2020 - 2021)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

**மெய் இன எழுத்துகள்**
பதினெட்டு (18)

| **மெல்லினம்** (ஆறு) 6 | | **வல்லினம்** (ஆறு) 6 | **இடையினம்** (ஆறு) 6 ஓர் இனம் |
|---|---|---|---|
| ங் ← | திங்கள் | → க் | ய் |
| ஞ் ← | மஞ்சள் | → ச் | ர் |
| ண் ← | மண்டலம் | → ட் | ல் |
| ந் ← | சந்தனம் | → த் | வ் |
| ம் ← | அம்பு | → ப் | ழ் |
| ன் ← | தென்றல் | → ற் | ள் |

**இனவெழுத்து:**

ஐஔ இஉச் செறிய முதலெழுத்
திவ்விரண் டோரினம் ஆய்வரல் முறையே
– நன்னூல் எக

**இனமென்றதற்குக் காரணம்:**

தான முயற்சி அளவு பொருள்வடி
வானவொன் றாதியோர் புடையொப் பினமே
– நன்னூல் எஉ

இயல் : 1-2

# இயல் - 2

## மயங்கொலிகள்

**மயங்கொலி எழுத்துகள்** (எட்டு)

- **ண, ன, ந**
- **ல, ள, ழ**
- **ர, ற**

ண, ன, ந, எழுத்துகள்
**மயங்கொலிகள்**

**ண**




நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் **ண**கரம் பிறக்கும்

**ன**




நாவின் மேல்வாய் அண்ணத்தின் முன்பகுதியைத் தொடுவதால் **ன**கரம் பிறக்கும்

**ந**




நாவின் நுனி மேல்வாய் பல்லின் அடிப்பகுதியைத் தொடுவதால் **ந**கரம் பிறக்கும்



**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# பொருள் வேறுபாடு

## இன எழுத்துகள்

| ட் - ண் டண்ணகரம் | த் - ந் தந்நகரம் | ற் - ன் றன்னகரம் |
|---|---|---|
| கண்டம் | பந்தல் | மன்றம் |
| வண்டி | சந்தனம் | நன்றி |
| நண்டு | பந்து | கன்று |

| ணகர | னகர | | நகர |
|---|---|---|---|
| ஆண்<br>ஆண்மகன் | ஆன்<br>பசு | அன்னாள்<br>அவள் | அந்நாள்<br>அந்த நாள் |
| உண்<br>சாப்பிடு | உன்<br>உன்னுடைய | நன்னாள்<br>நல்லநாள் | நந்நாள்<br>நம் நாள் |
| ஊண்<br>உணவு | ஊன்<br>இறைச்சி | தேனீர்<br>தேன் கலந்த நீர் | தேநீர்<br>தேயிலை நீர் |
| திணை<br>ஒழுக்கம் | தினை<br>தானியம் | முன்னாள்<br>முந்திய நாள் | முந்நாள்<br>மூன்று நாள் |
| வாணம்<br>வெடி | வானம்<br>ஆகாயம் | இன்னாள்<br>இனிய நாள் | இந்நாள்<br>இந்த நாள் |
| பணி<br>வேலை | பனி<br>குளிர்ச்சி | தன்னலம்<br>தன்னுடைய நலம் | தந்நலம்<br>தம்நலம் |

இயல் : 2-2

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

**அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.**

**இரண்டாம் பருவம் ஆறாம் வகுப்பு (2020 - 2021)**

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

# பொருள் வேறுபாடு

ல, ள, ழ, எழுத்துகள்
**மயங்கொலிகள்**

**ல**




நா மேல்பற்களின் அடியைத் தொடுவதால் **ல**கரம் பிறக்கும்.

வகர லகரம்

**ள**




நா மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் **ள**கரம் பிறக்கும்.

பொது ளகரம்

**ழ**




நாவின் நுனி மேல் நோக்கி வளைந்து வருடுவதால் **ழ**கரம் பிறக்கும்.

சிறப்பு ழகரம்

| லகரம் | ளகரம் | ழகரம் |
|---|---|---|
| அலை<br>நீர் அலை | அளை<br>புற்று | அழை<br>கூப்பிடு |
| இலை<br>செடியின் தழை | இளை<br>மெலி | இழை<br>நூல் இழை |
| விலை<br>மதிப்பு | விளை<br>உருவாக்குதல் | விழை<br>விரும்பு |
| கலை<br>கல்வி, ஆடை | களை<br>நீக்கு, அழகு | கழை<br>மூங்கில், கரும்பு |

இயல் : 2-3

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# பொருள் வேறுபாடு

ர, ற, எழுத்துகள்
**மயங்கொலிகள்**

| **ர**  | **ற**  |
|---|---|
| நாவின் நுனிமேல் அண்ணத்தின் **முதல் பகுதியைத்** தொட்டு வருவதால் **ர**கரம் பிறக்கும். | நாவின் நுனிமேல் அண்ணத்தின் **மையப் பகுதியைத்** உரசுவதால் **ற**கரம் பிறக்கும். |
| இடையின ரகரம் | வல்லின றகரம் |

| ரகரம் | றகரம் |
|---|---|
| அரம்<br>இரும்பைத் தேய்க்கும் கருவி | அறம்<br>தீமைக்கு நன்மை செய் |
| இரங்கு<br>இரக்கப்பட்டு | இறங்கு<br>கீழே வா |
| உரவு<br>வலிமை | உறவு<br>சொந்தம் |
| ஏரி<br>நீர் நிலை கூரை<br>வீட்டின் கூரை | ஏறி<br>மேலே ஏறி கூறை<br>புடவை |

இயல் : 2-4

# இயல் - 3

## சுட்டு எழுத்துகள் வினா எழுத்துகள்

### சுட்டு எழுத்துகள்

**அ, இ, உ**
(சுட்டிக் காட்டுவது)

### சுட்டு

**அகச்சுட்டு அ, இ, உ**

சுட்டு எழுத்தை நீக்கினால்
பொருள் தராது

எ.கா : ~~இ~~வன்
~~அ~~வன்
~~உ~~வன்

**புறச்சுட்டு அ, இ, உ**

சுட்டு எழுத்தை நீக்கினால்
பாருள் தரும்

எ.கா : ~~அ~~ப்பெண்
~~இ~~ப்பையன்
~~இ~~ந்நூல்

**அண்மைச் சுட்டு**
**எழுத்து இ**

அருகில் - அண்மையில் சுட்டுவன

இவன், இவர், இவள், இது,
இவை, இவர்கள், இம்மரம்,
இவ்வீடு

**சேய்மைச்சுட்டு**
**எழுத்து அ**

தொலைவில் சேய்மையில் சுட்டுவன

அவன், அவள், அவர், அது,
அவை, அவர்கள், அம்மரம்,
அவ்வீடு

**சுட்டுத் திரிபு**

அ - அந்த எனத்திரிதல்
இ - இந்த எனத்திரிதல்

அம்மரம் - அந்தமரம்
இவ்வீடு - இந்தவீடு

இயல் : 3-1

# வினா எழுத்துகள்

| சொல்லின் முதலில் | சொல்லின் இறுதியில் | சொல்லின் முதலிலும் இறுதியிலும் |
|---|---|---|
| **எ, யா** | **ஆ, ஓ** | **ஏ** |
| எங்கு? | அவனோ? | ஏன்? |
| என்ன? | அவனா? | நீதானே? |
| யாருக்கு? | | |
| யார்? | | |

# வினா வகைகள் (இரு)

## அகவினா
**எ, யா, ஏ**

வினா எழுத்தை நீக்கினால் பொருள் தராது

எ.கா : ~~எ~~து?
~~யா~~ர்?
~~ஏ~~ன்?

## புறவினா
**ஆ, ஓ, ஏ**

வினா எழுத்தை நீக்கினால் பொருள் தரும்

எ.கா : அவனா? (ன்+~~ஆ~~)
வருவனோ? (ன்+~~ஓ~~)
நீதானே? (ன்+~~ஏ~~)

இயல் : 3-2

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

இரண்டாம் பருவம் ஆறாம் வகுப்பு (2020 - 2021)

# மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்




இயல் : 3-3

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 1

## குற்றியலுகரம், குற்றியலிகரம்

குறுமை+இயல்+உகரம் குற்றியலுகரம் அரை மாத்திரை (ஆறு வகைப்படும்)

| வ.எண் | வகைகள் | எடுத்துக்காட்டு | விளக்கம் |
|---|---|---|---|
| 1 | **நெடில் தொடர்க் குற்றியலுகரம்** | காது<br>ஆறு<br>பாடு | தனிநெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் நெடில் தொடர்க் குற்றியலுகரம் |
| 2 | **ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்** | எஃகு<br>அஃது<br>கஃசு | ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் |
| 3 | **உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்** | வயிறு<br>அரசு<br>வரலாறு | தனிநெடில் அல்லாத உயிர்மெய் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| 4 | **வன்தொடர்க் குற்றியலுகரம்** | மூக்கு<br>பேச்சு<br>பாட்டு<br>பத்து<br>உப்பு | வல்லின (க், ச், ட், த், ப், ற்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் வன்தொடர்க் குற்றியலுகரம் |
| 5 | **மென்தொடர்க் குற்றியலுகரம்** | நெஞ்சு<br>பண்பு<br>கன்று<br>பந்து | மெல்லின (ங், ஞ், ண், ந், ம், ன்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் வன்தொடர்க் குற்றியலுகரம் |
| 6 | **இடைத்தொடர்க் குற்றியலுகரம்** | எய்து<br>மார்பு<br>சால்பு<br>மூழ்கு | மெல்லின (ய், ர், ல், வ், ழ், ள்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் மென்தொடர்க் குற்றியலுகரம் |

இயல் : 1-1

## குற்றியலிகரம்

குறுமை+இயல்+இகரம்

(இரு இடங்களில் வரும் அரை மாத்திரை)

| | |
|---|---|
| நாடு யாது நாடியாது<br>ட்+உ ட்+இ<br>கொக்கு+யாது=சொக்கியாது<br>க்+உ க்+இ | கேள் மியா கேண்மியா<br>செல் + மியா = சென்மியா |
| குற்றியலுகரத்தில் உள்ள உகரம் இகரமாக மாறும் | **மி** யில் **(=ம்+இ)** உள்ள இகரம் குற்றியலிகரம் ஆகும் |

### குற்றியலிகரம்

யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய
– நன்னூல் : கரு

### குற்றியலுகரம்

நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே
– நன்னூல் கூச

இயல் : 1-2

# இயல் - 2

## நால்வகைக் குறுக்கங்கள்

**குறுக்கங்கள்**
(நான்கு வகைப்படும்)

- ஐகாரக்குறுக்கம்
- ஔகாரக்குறுக்கம்
- மகரக்குறுக்கம்
- ஆய்தக்குறுக்கம்

### ஐகாரக்குறுக்கம்

**சொல்**

| முதல் | இடை | இறுதி |
|---|---|---|
| **வை**யம் | க**லை**ஞன் | பற**வை** |
| ஒன்றரை மாத்திரை | ஒரு மாத்திரை | ஒரு மாத்திரை |

### ஔகாரக் குறுக்கம்

**சொல்**

| முதல் | இடை | இறுதி |
|---|---|---|
| ஔவையார் | × | × |
| ஒன்றரை மாத்திரை | | |

இயல் : 2-1

## மகரக் குறுக்கம்

வகரத்தின் முன் வரும் மகரம்

வல**ம்** **வ**ந்தான்

கால் மாத்திரை

**ண், ன்** மெய்களின் பின்வரும் மகரம்

போ**ன்ம்**, மரு**ண்ம்**

கால் மாத்திரை

## ஆய்தக் குறுக்கம்

அல்+திணை

த் + இ

ற்

அல் + றிணை

ஃ

அஃறிணை

கால் மாத்திரை

முள்+தீது

த் + ஈ

ட்

முள் + டீது

ஃ

முஃடீது

கால் மாத்திரை

இயல் : 2-2

# இயல் - 3

## வழக்கு (இருவகைப்படும்)

- இயல்பு வழக்கு
- தகுதி வழக்கு

## இயல்பு வழக்கு
(மூன்று வகைப்படும்)

| இலக்கணமுடையது | இலக்கணப்போலி (அல்லது) முன்பின் தொக்கப்போலி | மரூஉ |
|---|---|---|
| நிலம், மரம், வான், எழுது | மூன்றில், நுனிக்கிளை | தஞ்சை, நெல்லை |
| இலக்கண நெறி மாறாமல் அமைந்த சொல் | இல்முன், கிளைநுனி என்ற இலக்கண முறைப்படி அமையாத சொற்கள் இலக்கணப்போலி ஆகும் | இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து சிதைந்து வழங்கும் சொற்கள் |

இயல் : 3-1

# முதலாம் பருவம் ஏழாம் வகுப்பு (2020 - 2021)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### தகுதி வழக்கு
(மூன்று வகைப்படும்)

**இடக்கரடக்கல்**

கால் கழுவி வந்தான்
ஒன்றுக்குப்போய் வந்தான்

வெளிப்படையாகச் சொல்லத்தகாத சொற்களை மறைத்துக் கூறுவது

**மங்கலம்**

திருமுகம் வந்தது
இயற்கை எய்தினார்

மங்கமில்லாத சொற்களை மங்கலமான சொற்களால் கூறுவது

**குழூஉக்குறி**

பொன்னைப் பறி
ஆடையைக் காரை

ஒரு குழுவினர் தமக்குள் பயன்படுத்திக் கொள்ளும் சொற்கள்

### போலி
(மூன்று வகைப்படும்)

**முதற்போலி**

பசல் - பைசல்
மஞ்சு - மைஞ்சு
மயல் - மையல்

முதல் எழுத்து மாறினாலும் பொருள் தரும்

**இடைப்போலி**

அமச்சு - அமைச்சு
இலஞ்சி - இலைஞ்சி
அரயர் - அரையர்

இடையில் உள்ள எழுத்து மாறினாலும் பொருள் தரும்

**கடைப்போலி**

அகம் - அகன்
நிலம் - நிலன்
முகம் - முகன்

இறுதியில் உள்ள எழுத்து மாறினாலும் பொருள் தரும்

**முற்றுப்போலி**

**ஐந்து - அஞ்சு**

எழுத்துகள் அனைத்தும் வேறுபட்டாலும் பொருள் தரும்

இயல் : 3-2

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் -1

## இலக்கியவகைச் சொற்கள்

**சொல்**

ஓர் எழுத்து தனித்தும் பல எழுத்துகள் தொடர்ந்தும் பொருள் தருவது சொல்

**வேறுபெயர்கள்**

சொல், மொழி, பதம், கிளவி, வார்த்தை

**சொல்**

**இலக்கண வகைச்சொற்கள்**

1. பெயர்ச்சொல்
2. வினைச்சொல்
3. இடைச்சொல்
4. உரிச்சொல்

**இலக்கிய வகைச்சொற்கள்**

1. இயற்சொல்
2. திரிசொல்
3. திசைச்சொல்
4. வடசொல்

**இயற்சொல்**

படிக்காதவர், படித்தவர், அனைவருக்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல்

எடுத்துக்காட்டு

| | | |
|---|---|---|
| **மண்**, **பொன்** | - | **பெயர்**இயற்சொல் |
| **நட**ந்தான், **வ**ந்தாள் | - | **வினை**இயற்சொல் |
| அவ**னை**, அவ**ரால்** | - | **இடை**இயற்சொல் |
| **மா**மரம் | - | **உரி**இயற்சொல் |



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## திரிச்சொல்

கற்றோர்க்கு மட்டுமே விளங்கும் சொற்கள்

வங்கூழ்-காற்று, அழுவம்-கடல், சாற்றினான்-சொன்னான், உறுபயன்-மிகுந்த பயன்

| | | |
|---|---|---|
| 1. | அழுவம், வங்கம் | பெயர்த்திரிசொல் |
| 2. | இயம்பினான், பயின்றாள் | வினைத்திரிசொல் |
| 3. | அன்ன, மான | இடைத்திரிசொல் |
| 4. | கூர், கழி | உரித்திரிசொல் |

## திரிச்சொல் (இருவகைப்படும்)

| ஒருபொருள் குறித்த **பலதிரிசொற்கள்** | |
|---|---|
| கப்பல் | வங்கம்<br>அம்பி<br>நாவாய் |

| பலபொருள் குறித்த **ஒரு திரிசொல்** | |
|---|---|
| பூவின்இதழ்<br>உதடு<br>கண்ணிமை<br>பனையோடு<br>நாளிதழ் | இதழ் |

## திசைச்சொல்

பிறமொழிகளில் இருந்து வந்து தமிழில் வழங்கி வரும் சொற்கள்

கேணி - கிணறு, பெற்றம் - பசு

| சொல் | | திசை | | பொருள் |
|---|---|---|---|---|
| ஆசாமி | - | உருது | - | ஆள் |
| சாவி | - | போர்த்துக்கீசியம் | - | திறவுகோல் |
| சன்னல் | - | போர்த்துக்கீசியம் | - | சாளரம் |
| பண்டிகை | - | தெலுங்கு | - | விழா |
| இரயில் | - | ஆங்கிலம் | - | தொடர்வண்டி |
| பெற்றம் | - | தென்பாண்டி | - | பசு |
| தள்ளை | - | குட்டநாடு | - | தாய் |
| அச்சன் | - | குடநாடு | - | தந்தை |
| பாழி | - | பூழிநாடு | - | சிறுகுளம் |

இயல் : 1-2

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இரண்டாம் பருவம் ஏழாம் வகுப்பு (2020 - 2021)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

| பன்னிரண்டு நிலங்கள் (நாடுகள்) | பதினெட்டு மொழி நாடுகள் |
|---|---|
| 1. தென்பாண்டி | 1. தமிழ்நாடு |
| | 2. சிங்களம் |
| 2. குட்டநாடு. | 3. சோனகம் |
| | 4. சாவகம் |
| 3. குடநாடு | 5. சீனம் |
| 4. கற்காநாடு | 6. துளு |
| 5. வேணாடு | 7. குடகம் |
| 6. பூழிநாடு | 8. கொங்கணம் |
| | 9. கன்னடம் |
| 7. பன்றிநாடு | 10. கொல்லம் |
| 8. அருவாநாடு | 11. தெலுங்கம் |
| | 12. கலிங்கம் |
| 9. அருவாவடதலைநாடு | 13. வங்கம் |
| 10. சீதநாடு | 14. கங்கம் |
| | 15. மகதம் |
| 11. மலநாடு | 16. கடாரம் |
| 12. புனல்நாடு | 17. கௌடம் |
| | 18. குசலம் |

### வடசொல்

வடமொழியிலிருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் வடசொல்

| | | | |
|---|---|---|---|
| வருடம் | – ஆண்டு | விடம் | – நஞ்சு |
| மாதம் | – திங்கள் | சக்கரம் | – உருளை |
| கமலம் | – தாமரை | உற்சவம் | – விழா |

இயல் : 1-3

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## இரண்டாம் பருவம் ஏழாம் வகுப்பு (2020 - 2021)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### வடச்சொல் (இருவகைப்படும்)

**தற்சமம்**

- கமலம், அலங்காரம்
- வடமொழியில் இருப்பது போன்று தமிழில் எழுதுவது தற்சமம்
- தற்வசமம் - எழுத்து, ஒலி மாற்றம் இல்லை

**தற்பவம்**

- லக்ஷ்மி - இலக்குமி, விஷம் - விடம்
- வடமொழி எழுத்துகளைத் தமிழ்மொழி எழுத்துகளால் எழுதுவது
- தற்பவம் - எழுத்து, ஒலி திரிந்து வருதல்

### சொல்

| இயற்சொல் | திரிசொல் | திசைச்சொல் | | வடசொல் | |
|---|---|---|---|---|---|
| 1. பெயர்இயற்சொல்<br>2. வினைஇயற்சொல்<br>3. இடைஇயற்சொல்<br>4. உரிஇயற்சொல் | பெயர்த்திரிசொல்<br>வினைத்திரிசொல்<br>இடைத்திரிசொல்<br>உரித்திரிசொல் | பன்னிரண்டு நிலங்கள் (நாடுகள்) | பதினேழு நாடுகள் | தற்சமம் | தற்பவம் |

திரிசொல்:

| | |
|---|---|
| ஒரு பொருள் குறித்த பல திரிசொற்கள் | பல பொருள் குறித்த ஒரு திரிச்சொல் |

இயல் : 1-4

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 2

## ஓரெழுத்து ஒருமொழி

### பகுபதம், பகாப்பதம்

ஓரெழுத்து ஒருமொழி (மொழி = சொல்)

**ஓர் எழுத்தே பொருள் தரும்** சொல்லாக அமைவதை **ஓரெழுத்து ஒரு மொழி** ஆகும்.

பவணந்தி முனிவர் நன்னூல் இலக்கண நூலில் நாற்பத்திரண்டு (42) ஓரெழுத்து ஒருமொழி உள்ளன என எழுதியுள்ளார்.

**1. உயிர் வரிசையில்**

ஆ - பசு,
ஈ - கொடு,
ஊ - இறைச்சி,
ஏ - அம்பு,
ஐ - தலைவன்,
ஓ - மதகுநீர் தாங்கும் பலகை

**2. சகரவரிசை**

சா - இறந்துபோ
சீ - இகழ்ச்சி
சே - உயர்வு
சோ - மதில்

**3. நகரவரிசை**

நா - நாவு
நீ - முன்னிலை ஒருமை
நே - அன்பு
நை - இழிவு
நொ - நோய்
நோ - வறுமை

**4 ககரவரிசையில்**

கா - சோலை,
கூ - பூமி,
கை - ஒழுக்கம்,
கோ - அரசன்

**5. தகரவரிசை**

தா - கொடு
தீ - நெருப்பு
து - உண்
தூ - தூய்மை
தே - கடவுள்
தை - தைத்தல்

**6. பகரவரிசை**

பா - பாடல்
பூ - மலர்
பே - மேகம்
பை - இளமை
போ - செல்



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## 7. மகரவரிசை

மா - மாமரம்
மீ - வான்
மூ - மூப்பு
மே - அன்பு
மை - அஞ்சனம்
மோ - முகத்தல்

## 8. யகரவரிசை

யா - அகலம்

## 9. வகரவரிசை

வா - அழைத்தல்
வீ - மலர்
வை - புல்
வௌ - கவர்

## பகாப்பதம்

(அடிச்சொல் அல்லது வேர்ச்சொல்)

(பகா - பிரிக்கமுடியாத, பதம் - சொல்)

மரம், கழனி, உண், எழுது

பிரிக்க முடியாத சொற்கள் பகாப்பதம்

## பகாப்பதம்

(நான்கு வகைப்படும்)

| பெயர்ப்பகாப்பதம் | வினைப்பகாப்பதம் | இடைப்பகாப்பதம் | உரிப்பகாப்பதம் |
|---|---|---|---|
| நிலம் | நட | மன் | உறு |
| நீர் | வா | கொல் | தவ |
| நெருப்பு | படி | தில் | நனி |
| காற்று | வாழ் | போல் | கழி |

இயல் : 2-2

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## இரண்டாம் பருவம் ஏழாம் வகுப்பு (2020 - 2021)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

**பகுபதம்** (பகு = பரி ; பதம் = சொல்)

பிரித்தால் உறுப்புகள் வரும் சொல் பகுபதம் ஆகும்

### பகுபதம் உறுப்புகள் (ஆறு ஆகும்)

| பகுதி | விகுதி | இடைநிலை | சந்தி | சாரியை | விகாரம் |
|---|---|---|---|---|---|
| கட்டளைசொல் சொல்லின் முதலில் வருவது முதல்நிலை | சொல்லின் இறுதியில் வரும் இறுதிநிலை | சொல்லின் இடையில் வந்து காலம் காட்டும் அல்லது எதிர்மறை காட்டும் | பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் மெய் எழுத்தாக வரும் | இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும் அசைச்சொல் | சொல்லின் ஏற்படும் எழுத்துமாற்றம் விகாரம் |

### பகுபதம் (இருவகைப்படும்)

#### பெயர்ப்பகுபதம் ஆறு வகைப்படும்

1. பொருட்பெயர்ப்பகுபதம்:
   பொன்னன் (பொன்+அன்)
2. இடப்பெயர்ப்பகுபதம்:
   நாடன் (நாடு+அன்)
3. காலப்பெயர்ப்பகுபதம்:
   சித்திரையாள் (சித்திரை+ஆள்)
4. சினைப்பெயர்ப்பகுபதம்:
   கண்ணன் (கண்+அன்)
5. குணப்பெயர்ப்பகுபதம்:
   இனியன் (இனிமை+அன்)
6. தொழிற்பெயர்ப்பகுபதம்:
   உழவர் (உழவு+அர்)

#### வினைப்பகுபதம் இரு வகைப்படும்

**தெரிநிலை வினைப்பகுபதம்**

நடந்தான்
நடந்த
நடந்து
நடந்திலன்
நடவாத
நடவாது
நடந்தவன்

**குறிப்பு வினைப்பகுபதம்**

பொன்னன்
கரிய
மொல்ல
அல்லன்
அல்லாத
அன்றி
பொன்னவன்

இயல் : 2-3

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இரண்டாம் பருவம் ஏழாம் வகுப்பு (2020 - 2021)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### இடைநிலைகள்

| | | |
|---|---|---|
| ட், த், ற், ன், இன் | - | இறந்தகால இடைநிலை |
| கிறு, கின்று, ஆநின்று | - | நிகழ்கால இடைநிலை |
| ப், வ், க் | - | எதிர்கால இடைநிலை |
| ஆ, அல், இல் | - | எதிர்மறை இடைநிலை |

### விகுதி வகைகள்

| | | |
|---|---|---|
| 1. அன், ஆன் | - | ஆண்பால் வினைமுற்று விகுதி |
| 2. அள், ஆள் | - | பெண்பால் வினைமுற்று விகுதி |
| 3. அர், ஆர் | - | பலர்பால் வினைமுற்று விகுதி |
| 4. து | - | ஒன்றன்பால் வினைமுற்று விகுதி |
| 5. அ | - | பலவின்பால் வினைமுற்று விகுதி |
| 6. என், ஏன் | - | தன்மைஒருமைவினைமுற்று விகுதி |
| 7. அ | - | பெரெச்ச விகுதி |
| 8. உ | - | வினையெச்ச விகுதி |
| 9. க | - | வியங்கோள் வினைமுற்று விகுதி |
| 10. கள் | - | விகுதிமேல் விகுதி |

### விகுதிகள்

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம்மார்
அ ஆ கு டு து று என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஓமோ டும்மூர்
க ட த ற ஐ ஆய் இம்மின் இர்ஈர்
ஈயர் கயவு மென்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினும் சிலவே

- நன்னூல் நூற்பா : 140

இயல் : 2-4

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## இரண்டாம் பருவம் ஏழாம் வகுப்பு (2020 - 2021)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### பகுபத உறுப்பிலக்கணம்

| எண் | சொற்கள் | பிரிப்பு | பகுதி | விகாரம் | சந்தி | விகாரம் | இடைநிலை | எதிர்மறை இடைநிலை | எழுத்துப் பேறு | சாரியை | விகுதி | விகுதி மேல் விகுதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வாழ்க | வாழ்+க | வாழ் | | | | | | | | க | |
| 2 | கற்க | கல்(ற்)+க | கல் | ல்-ற் | | | | | | | க | |
| 3 | உண்டான் | உண்+ட்+ஆன் | உண் | | | | ட் | | | | ஆன் | |
| 4 | படித்தாள் | படி+த்+த்+ஆள் | படி | | த் | | த் | | | | ஆள் | |
| 5 | சென்றார் | செல்(ன்)+ற்+ஆர் | செல் | ல்-ன் | | | ற் | | | | ஆர் | |
| 6 | சொன்னாள் | சொல்(ன்)+ன்+ஆள் | சொல் | ல்-ன் | | | ன் | | | | ஆள் | |
| 7 | உறங்கினான் | உறங்கு+இன்+ஆன் | உறங்கு | | | | இன் | | | | ஆன் | |
| 8 | நடக்கிறாள் | நட+க்+கிறு+ஆள் | நட | | க் | | கிறு | | | | ஆள் | |
| 9 | எதிர்ப்பார்கள் | எதிர்+ப்+ப்+ஆர்+கள் | எதிர் | | ப் | | ப் | | | | ஆர் | கள் |
| 10 | படித்த | படி+த்+த்+அ | படி | | த் | | த் | | | | அ | |
| 11 | நடந்து | நட+த்(ந்)+த்+உ | நட | | த் | த்-ந் | த் | | | | உ | |
| 12 | வந்தேன் | வா(வ)+த்(ந்)+த்+ஏன் | வா | வா-வ | த் | த்-ந் | த் | | | | ஏன் | |
| 13 | வந்தனள் | வா(வ)+த்(ந்)+த்+அன்+அள் | வா | வா-வ | த் | த்-ந் | த் | | | அன் | அள் | |
| 14 | செய்கின்றனர் | செய்+கின்று+அன்+அர் | செய் | | | | கின்று | | | அன் | அர் | |
| 15 | விழையாதான் | விழை+ய்+ஆ+த்+ஆன் | விழ | | ய் | | | ஆ | த் | | ஆன் | |
| 16 | காணாத | காண்+ஆ+த்+அ | காண் | | | | | ஆ | த் | | அ | |
| 17 | படித்தார்கள் | படி+த்+த்+ஆர்+கள் | படி | | த் | | த் | | | | ஆர் | கள் |

இயல் : 2-5

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 3

## தொழிற்பெயர்

### தொழிற்பெயர்

ஒரு செயலின் அல்லது வினையின் பெயராக அமைவது தொழிற்பெயர்

படர்க்கை இடத்தில் மட்டும் வரும்

படித்தல், ஆடல், நடிப்பு, எழுதுதல், பொறுத்தல்

### தொழிற்பெயர்
(மூன்று வகைப்படும்)

#### விகுதிபெற்ற தொழிற்பெயர்

விகுதிகள்
தல், அல், வு, கை, வை
கு, பு, தி, சி, வி,மை

எடுத்துக்காட்டு:

| | | |
|---|---|---|
| நடத்தல் | - | தல் |
| உண்ணல் | - | அல் |
| வாழ்வு | - | வு |
| வாழ்க்கை | - | கை |
| பார்வை | - | வை |
| போக்கு | - | கு |
| நட்பு | - | பு |
| மறதி | - | தி |
| உணர்ச்சி | - | சி |
| கல்வி | - | வி |
| செய்யாமை | - | மை |

#### முனிலைத் தொழிற்பெயர்

ஏவல் ஒருமை வினையாக அமையும் வினைச்சொல்லின் பகுதியை முதனிலை தொழிற்பெயராக அமைதல்

வானில் **இடி** இடித்தது
சோறு **கொதி** வந்தது
ஓர் **அடி** அடித்தான்
தம் பேச்சால் **புகழ்** பெற்றார்

#### முதனிலைதிரிந்த தொழிற்பெயர்

முதனிலை திரிவதால் உருவாகும் தொழிற்பெயராகும்

| | | |
|---|---|---|
| விடு | - | வீடு |
| மின் | - | மீன் |
| கொள் | - | கோள் |
| உடன்படு | - | உடன்பாடு |
| பெறு | - | பேறு |




செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 1

## அணி இலக்கணம்

**செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகு பெறச் செய்தல் (அணி = அழகு)**

### 1. உவமை அணி

செய்யுளில் **உவமானம்**, **உவமேயம்**, **உவம உருபு** ஆகிய மூன்றும் வெளிப்படையாக வருவது **உவமையணி** ஆகும்.

எ.கா :

உவமானம் — அகழ்வாரைத் தாங்கும் நிலம்
உவமஉருபு — போலத்
தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை — உவமேயம்

விளக்கம் : இக்குறப்பாவில் **அகழ்வாரைத் தாங்கும் நிலம்** என்பது **உவமானம்** **தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை** என்பது **உவமேயம்**, **போல** என்பது **உவமஉருபு**. எனவே இது **உவமை அணி** ஆகும்

### 2. எடுத்துக்காட்டு உவமையணி

செய்யுளில் உவமானம் ஒரு தொடராகவும், உவமேயம் ஒரு தொடராகவும் வந்து இவற்றிக்கு இடையில் அதுபோல என்ற உவமஉருபு மறைந்து வந்தால், **எடுத்துக்காட்டு உவமையணி** ஆகும்.

## தொழிற்பெயர் படித்தல் (மூன்று வகைப்படுத்துதல்)

| விகுதிபெற்ற தொழிற்பெயர் | முதனிலைத் தொழிற்பெயர் | முதனிலைதிரிந்த தொழிற்பெயர் |
| --- | --- | --- |
| வாழ்க்கை - கை | வானில் இடி இடித்தது | பெறு - பேறு |



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

எ.கா :

உவமானம்: தொட்டனைத்து ஊறும் மணற்கேணி

(அதுபோல) — உவமஉருபு மறைந்துள்ளது

உவமேயம்: மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு

விளக்கம் : இக்குறப்பாவில் **தொட்டனைத்து ஊறும் மணற்கேணி** என்பது **உவமானம்,** **மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு** என்பது **உவமேயம்,** இவற்றுக்கு இடையே **அதுபோல** என்ற **உவமஉருபு** மறைந்துள்ளதால், இது **எடுத்துக்காட்டு உவமை அணி** ஆகும்.

## 3. இல்பொருள் உவமையணி

செய்யுளில் உலகில் இல்லாத பொருளையோ, செயலையோ உவமையாகக் கூறுவது, **இல்பொருள் உவமையணி** ஆகும்.

எ.கா : காளை, **கொம்பு முளைத்த குதிரை** போலப் பாய்ந்து வந்தது

விளக்கம் : இத்தொடரில் **கொம்பு முளைத்த குதிரை போல** என்ற **உவமை** உலகில் இல்லாத பொருளை உவமையாகக் கூறியதால், இது **இல்பொருள் உவமை அணி** ஆகும்.

எ.கா : மாலை வெயிலில் மழைத்தூறல்
**பொன்மழை பொழிந்தது** போல் தோன்றியது.

விளக்கம் : இத்தொடரில் **பொன்மழை பொழிந்தது போல்** என்ற **உவமை** உலகில் இல்லாத செயலை உவமையாகக் கூறியதால், இது **இல்பொருள் உவமை அணி** ஆகும்.

இயல் : 1-2

# இயல் - 2

## 4. உருவக அணி

உவமிக்கப்படும் பொருள் முன்னும் உவமை பின்னும் வரும்

செய்யுளில் உவமை வேறு உவமேயம் வேறு என்று இல்லாமல் இரண்டும் ஒன்றே என்று தோன்றும்படி கூறுவது **உருவக அணி** ஆகும்.

எ.கா :

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய
சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று.

விளக்கம் : இப்பாடலில் பூமி அகல் விளக்காகவும், கடல் நெய்யாகவும், கதிரவன் சுடராகவும் உருவகப்படுத்தபட்டு உள்ளன எனவே, இப்பாடல் **உருவக அணி** ஆகும்

## 5. ஏகதேச உருவக அணி

ஏக - ஒரு, தேச - பகுதி

செய்யுளில் ஒரு பகுதியை மட்டும் உருவகப்படுத்தி, அதனோடு தொடர்புடைய மற்றொரு பகுதியை உருவகப்படுத்தாமல் விடுவது, **ஏகதேச உருவக அணி** ஆகும்.

எ.கா :

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

விளக்கம் : இக்குறட்பாவில் மக்களின் செயல்களை உரைகல்லாக உருவகம் செய்து, மக்களது உயர்வையும், தாழ்வையும் பொன்னாக உருவகம் செய்யவில்லை எனவே, இப்பாடல் **உருவக அணி** ஆகும்



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 3

## ஆகுபெயர், இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்

### ஆகுபெயர்

ஒன்றன் பெயர் அதனைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய வேறு ஒன்றிற்குப் பெயராகி வரும்.

எ.கா : வீட்டுக்கு **வெள்ளை** அடித்தான்

விளக்கம் : இத்தொடரில் **வெள்ளை** என்பது நிறத்தைக் குறிக்காமல் வெண்மை நிறமுடைய **சுண்ணாம்பை**க் குறித்ததால், இது ஆகுபெயர் ஆகும்.

### ஆகுபெயர்

**பொருள்முத லாறோ டளவைசொல் தானி**
**கருவி காரியம் கருத்தன் ஆதியுள்**
**ஒன்றன் பொரான் அதறடகியை பிறிதைத்**
**தொன்முறை உனரப்பன ஆகு பெயரே!**

- நன்னூல் : 290

# ஆகுபெயர்

பெயர்ச்சொல் ஆறு வகை

| | | | |
|---|---|---|---|
| 1 | **பொருளாகு பெயர் (அல்லது) முதலாகு பெயர்** | மல்லிகை சூடினாள் | மல்லிகை – முழுப்பொருளின் பெயர் அதன் உறுப்பாகிய மலரைக் குறிப்பதால் பொருளாகுபெயர் ஆகும். |
| 2 | **இடவாகு பெயர்** | கபடி போட்டியில் தமிழ்நாடு வெற்றி பெற்றது | இடத்தின் பெயர், இடத்தைக் குறிக்காமல், இடத்தைச் சேர்ந்த கபடி வீரர்களைக் குறிப்பதால், இடவாகுபெயர் ஆகும். |
| 3 | **காலவாகு பெயர்** | திசம்பர் சூடினாள் | காலப்பெயர், அக்காலத்தில் மலரும் பூவைக் குறிப்பதால், காலவாகுபெயர் ஆகும். |
| 4 | **சினையாகு பெயர்** | தலைக்கு ஒரு பழம் கொடு | சினையின் (உறுப்பின் – தலை) பெயர் முதலாகிய பொருளுக்குப் பெயராகி வருவது சினையாகுபெயர் ஆகும். |
| 5 | **பண்பாகு பெயர்** | இனிப்பு தின்றான் | இனிப்பு பண்புப்பெயர் தின்பண்டத்தைக் குறிப்பதால், பண்பாகுபெயர் ஆகும். |
| 6 | **தொழிலாகு பெயர்** | பொங்கல் உண்டான் | பொங்கல் (பொங்குதல்) தொழிற்பெயர் அத்தொழிலால் உருவான உணவினைக் குறிப்பதால் தொழிலாகுபெயர் ஆகும். |

இயல் : 3-2

## இரட்டைக்கிளவி

இரட்டை - இரண்டு, கிளவி - சொல்

**விறுவிறு** என நடந்தார்
**கலகல** எனச் சிரித்தார்
**படபட** என முறிந்தன
**குடுகுடு** எனச் சென்றார்

**விறுவிறு**, **கலகல**, **படபட**, **குடுகுடு** - அசைச்சொற்கள் - இரண்டு இரண்டாக இணைந்து வரும் - பிரித்தால் பொருள் தராது.

இவ்வாறு இரட்டையாக இணைந்து வந்து பிரித்தால், பொருள் தராத சொற்கள் **இரட்டைக்கிளவி** ஆகும்.

## அடுக்குத்தொடர்

**பாம்பு பாம்பு பாம்பு** என்று கத்தினான்
**எங்கே எங்கே** என்று கேட்டனர்
**இல்லை இல்லை** என்று சொன்னான்
**பிடி பிடி பிடி பிடி** என்று துரத்தினார்கள்

சில சொற்கள் இரண்டு, மூன்று, நான்கு முறை வந்துள்ளன. பிரித்தால் பொருள் தரும் அச்சம், விரைவு, சினம் போன்ற காரணங்களால் ஒரு சொல் பலமுறை வருவதை **அடுக்குத்தொடர்** ஆகும்.

இயல் : 3-3

# ஒப்பீடு

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| 1. சொற்களைப் பிரித்தால் பொருள் தரும் | 1. சொற்களைப் பிரித்தால் பொருள் தராது. |
| 2. இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வரும் | 2. இரட்டைச் சொல்லாக வரும். |
| 3. சொற்கள் தனித்தனியே வரும் | 3. சொற்கள் இணைந்தே நிற்கும். |
| 4. விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம், ஆகிய பொருள்களில் வரும். | 4. வினைக்கு அடைமொழியாகக் குறிப்புப்பொருளில் வரும். |
| எ.கா : **படி படி படி** | எ.கா : **பட பட** |

## அடுக்குத்தொடர்

**அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருச்சொல்**
**இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை அடுக்கும்**

– நன்னூல் : 395

## இரட்டைக்கிளவி

**இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா**

– நன்னூல் : 396

இயல் : 3-4

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம்.

இராணிப்பேட்டை மாவட்டம்.

## இரண்டாம் பருவம் - எட்டாம் வகுப்பு (2019 - 2020)

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு இலக்கண வரைபடங்கள்

### இயல் - 1

**வேற்றுமை**

(எட்டு வகைப்படும்)

- பெயர்
- ஐ
- ஆல்
- கு
- இன்
- அது
- கண்
- விளி

**முதல் வேற்றுமை**

(அல்லது)

**எழுவாய் வேற்றுமை**

↓

பெயர் அல்லது எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல் வருவது

↓

பாவை வந்தாள்



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இரண்டாம் பருவம் - எட்டாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு இலக்கண வரைபடங்கள்

### இரண்டாம் வேற்றுமை (ஐ)

ஒரு பெயரைச் செயப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டுவதால் இது செயப்படுபொருள் **வேற்றுமை** என்பர்

| பொருள்கள் | எடுத்துகாட்டுகள் |
|---|---|
| 1. ஆக்கல் | கரிகாலன் கல்லணையைக் கட்டினான் |
| 2. அழித்தல் | பெரியார் மூடநம்பிக்கைளை ஒழித்தார் |
| 3. அடைதல் | கோவலன் மதுரையை அடைந்தான் |
| 4. நீத்தல் | காமராசர் பதவியைத் துறந்தார் |
| 5. ஒத்தல் | தமிழ் நமக்கு உயிரைப் போன்றது |
| 6. உடைமை | திருவள்ளுவர் பெரும்புகழை உடையவர் |

### மூன்றாம் வேற்றுமை

ஆல், ஆன், ஒடு, ஓடு.

**கருவிப் பொருள்** — ஆல், ஆன்

- **முதற்கருவி** — ஆல்
  - கருவியே செய்யப்படும் பொருளாக மாறுவது
  - மரத்தால் சிலை செய்தான்
- **துணைக்கருவி** — ஆல்
  - ஒன்றைச் செய்வதற்குத் துணையாக இருப்பது
  - உளியால் சிலை செய்தான்

**கருத்தாப் பொருள்** — ஆல், ஆன்

- **ஏவுதல் கருத்தா** — ஆல்
  - பிறரைச் செய்யவைப்பது ஏவுதல் கருத்தா
  - கரிகாலனால் கல்லணை கட்டப்பட்டது
- **இயற்றுதல் கருத்தா** — ஆல்
  - தானே செய்வது இயற்றுதல் கருத்தா
  - சேக்கிழாரால் பெரியபுராணம் இயற்றப்பட்டது

இயல் : 1-2

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இரண்டாம் பருவம் - எட்டாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு இலக்கண வரைபடங்கள்

### ஆன், பெரும்பாலும் செய்யும் வழக்கில் வரும்

எ.கா : புறந்தூய்மை நீரான் அமையும்

### ஒடு, ஓடு உடனிகழ்ச்சி பொருள்

| பொருள்கள் | எடுத்துகாட்டுகள் |
| --- | --- |
| ஒடு | தாயொடு குழந்தை சென்றது |
| ஓடு | ஆசிரியரோடு மாணவர்கள் சென்றனர் |

### நான்காம் வேற்றுமை (கு)

| பொருள்கள் | எடுத்துகாட்டுகள் |
| --- | --- |
| 1. கொடை | முல்லைக்குத் தேர் கொடுத்தான் |
| 2. பகை | புகை மனிதனுக்குப் பகை |
| 3. நட்பு | கபிலருக்கு நண்பர் பரணர் |
| 4. தகுதி | கவிதைக்கு அழுகு கற்பனை |
| 5. அதுவாதல் | தயிருக்குப் பால் வாங்கினான் |
| 6. பொருட்டு | தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபட்டார் |
| 7. முறை | செங்குட்டுவனுக்குத் தம்பி இளங்கோ |
| 8. எல்லை | தமிழ்நாட்டுக்குக் கிழக்கு வங்கக்கடல் |

இயல் : 1-3

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஐந்தாம் வேற்றுமை
இல், இன்.

| பொருள்கள் | எடுத்துகாட்டுகள் |
|---|---|
| நீங்கல் | தலையின் இழிந்த மயிர் |
| ஒப்பு | பாம்பின் நிறம் ஒரு குட்டி |
| எல்லை | தமிழ்நாட்டின் கிழக்கு வங்கக்கடல் |
| ஏது | சிலேடை பாடுவதில் வல்லவர் காளமேகம் |

## ஆறாம் வேற்றுமை
அது, ஆது, அ.

| | எடுத்துகாட்டுகள் |
|---|---|
| உரிமை பொருள் அல்லது கிழமைப் பொருள் | முருகனது வேல் |
| | நண்பனது கை |

இயல் : 1-4

## ஏழாம் வேற்றுமை

கண், மேல், கீழ், கால், இல், இடம்.

- எங்கள் ஊரின்கண் மழை பெய்தது → இடம்
- இரவின்கண் மழை பெய்தது → காலம்

## எட்டாம் வேற்றுமை அல்லது விளி வேற்றுமை

படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பதையே விளி

- அண்ணன் → அண்ணா → திரிதல்
- புலவர் → புலவரே → மாறுதல்

இயல் : 1-5

# இரண்டாம் பருவம் - எட்டாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு இலக்கண வரைபடங்கள்

| வ. எண் | வேற்றுமை | உருபு | பொருள் | வேறு பெயர் | சொல் உருபு | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|---|---|
| 1. | முதல் | இல்லை | பயனிலை ஏற்றல் | எழுவாய் வேற்றுமை | ஆனவன் ஆவான் ஆகின்றவன் | அருள் வந்தான் |
| 2. | இரண்டாம் | ஐ | ஆக்கல் அழித்தல் அடைதல் நீக்கல், ஒத்தல் உடைமை | செயப்படுபொருள் வேற்றுமை | -- | பாடத்தை எழுதினான் |
| 3. | மூன்றாம் | ஆல், ஆன் ஒடு, ஓடு | கருவி, கருத்தா உடனிகழ்ச்சி | -- | உடன், கூட, கொண்டு, வைத்து | மகனோடு தந்தை வந்தார் |
| 4. | நான்காம் | கு | கொடை, பகை, நட்பு, முறை, தகுதி, அதுவாதல் பொருட்டு, எல்லை | -- | ஆக, பொருட்டு, நிமித்தம் | பாம்புக்குப் பகை கருடன் |
| 5. | ஐந்தாம் | இல் இன் | நீங்கல், எல்லை ஏது, ஒப்பு | -- | நின்று , இருந்து, காட்டிலும், பார்க்கிலும் | கல்வியில் பெரியன் கம்பன் |
| 6. | ஆறாம் | அது, ஆது, அ. | தற்கிழமை, பிறிதின்கிழமை | -- | உடைய | எனது கை |
| 7. | ஏழாம் | கண் | (பொருள் முதல் ஆறும்) | -- | -- | கையின்கண் உள்ளது விரல் |
| 8. | எட்டாம் | இல்லை | விளித்தல் பொருள் | விளிவேற்றுமை | -- | நண்பா எழுது! |

இயல் : 1-6

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## இயல் - 2

## தொகைநிலைத் தொடர்கள்

ஆறு வகைப்படும்

| | | |
|---|---|---|
| **1. வேற்றுமைத்தொகை** | இரு சொற்களுக்கு இடையில் **(ஐ, ஆல், கு, இன், அது, கண்)** **வேற்றுமை உருபு மறைந்து** வந்தால் | **திருக்குறள் படித்தான்**<br>திருக்குறளைப் படித்தான் |
| **உருபும் பயனும் உடன்தொக்கதொகை** | இரு சொற்களுக்கு இடையில் **வேற்றுமை உருபும்**, அதன் பொருளை விளக்கும் சொல்லும் **(பயன்) மறைந்து** வந்தால் | **பொற்சிலை**<br>பொன்னால் ஆகிய சிலை |
| **2. வினைத்தொகை** | காலம் காட்டும் **இடைநிலையும், பெயரெச்ச விகுதியும் மறைந்து** வந்தால் | **வளர்தமிழ்**<br>வளர்ந்த தமிழ்,<br>வளர்கின்ற தமிழ்,<br>வளரும் தமிழ் |
| **3. பண்புத்தொகை** | ஆன, ஆகிய **பண்பு உருபுகள் மறைந்து** வந்தால் | **வெண்ணிலவு, கருங்குவளை**<br>வெண்மையான நிலவு,<br>கருமையாகிய குவளை |
| **இருபெயரொட்டுப் பண்புத்தொகை** | **சிறப்புப்பெயர், பொதுப்பெயர்** பின்னும் வந்து இடையில் **ஆகிய** என்னும் **பண்பு உருபு மறைந்து** வந்தால் | **பனைமரம்**<br>பனை - சிறப்புப்பெயர்,<br>மரம் - பொதுப்பெயர்,<br>பனை ஆகிய மரம் |
| **4. உவமைத்தொகை** | உவமைக்கும், உவமேயத்திற்கும் இடையில் **(போல, போன்ற, அன்ன)** **உவம உருபு மறைந்து** வந்தால் | **மலர்விழி**<br>மலர் போன்ற விழி |
| **5. உம்மைத்தொகை** | இருசொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் **உம்** என்னும் **இடைச்சொல் மறைந்து** வந்தால் | **தாய் தந்தை, இரவு பகல்**<br>தாயும் தந்தையும்,<br>இரவும் பகலும் |
| **6. அன்மொழித்தொகை** | வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகியவை **அல்லாத சொற்கள் மறைந்து** வந்தால் | **பொற்றொடி வந்தாள்**<br>தொடி - வளையல்)<br>பொன்னாலாகிய வளையலை<br>அணிந்த பெண் வந்தாள் |




**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# தொகாநிலைத் தொடர்கள்

ஒன்பது வகைப்படும்

இரு சொற்களுக்கு இடையில் எச்சொல்லும் எவ்வுருபும் மறையாமல் பொருள் தருவது

| | | |
|---|---|---|
| 1. எழுவாய்த் தொடர் | மல்லிகை மலர்ந்தது | எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் எச்சொல்லும் மறையாமல் பொருள் தருவது |
| 2. விளித் தொடர் | நண்பா படி | இதில் விளிப் பெயர் பயனிலைக்கும் இடையில் எச்சொல்லும் மறையாமல் பொருள் தருவது |
| 3. வினைமுற்றுத் தொடர் | சென்றனர் வீரர் | இதில் வினைமுற்றுக்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்ததால் |
| 4. பெயரெச்சத் தொடர் | வரைந்த ஓவியம் | இதில் எச்சவினைக்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் எச்சொல்லும் மறையாமல் வருவது |
| 5. வினையெச்சத் தொடர் | தேடிப் பார்த்தான் | இதில் வினையெச்சச் சொல்லுக்கும் வினைமுற்றுக்கும் இடையில் எச்சொல்லும் மறையாமல் பொருள் தருவது |
| 6. வேற்றுமைத் தொடர் | கவிதையை எழுதினார் | இதில் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்து பொருள் தருவது |
| 7. இடைச்சொல் தொடர் | மற்றும் பிற | இதில் இடைச்சொல் வெளிப்படையாக வந்து பொருள் தருவது |
| 8. உரிச்சொல் தொடர் | சாலவும் நன்று | இதில் உரிச்சொல் வெளிப்படையாக வந்து பொருள் தருவது |
| 9. அடுக்குத் தொடர் | நன்று நன்று | இதில் ஒரே சொல் பலமுறை அடுக்கி வந்து பொருள் தருவது |

இயல் : 2-2

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## இயல் - 3

### புணர்ச்சி

நிலமொழி ஈறும் வருமொழி முதலும் சேர்வது

1. நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் → **உயிரீற்றுப் புணர்ச்சி**
2. நிலைமொழியின் இறுதி எழுத்து மெய் எழுத்தாக இருந்தால் → **மெய்யீற்றுப் புணர்ச்சி**
3. வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் → **உயிர்முதல் புணர்ச்சி**
4. வருமொழியின் முதல் எழுத்து மெய் எழுத்தாக இருந்தால் → **மெய்முதல் புணர்ச்சி**

### புணர்ச்சி
(இரு வகைப்படும்)

#### இயல்பு புணர்ச்சி

நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது மாற்றம் இல்லாதது

தாய்+மொழி = தாய்மொழி
உடல்+ஓம்பல் = உடலோம்பல்

#### விகாரப் புணர்ச்சி

நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது தோன்றல், திரிதல், கெடுதல் மாற்றம் வருதல்

| | | |
|---|---|---|
| தமிழ்+தாய் | = தமிழ்த்தாய் | – த்-தோன்றல் |
| வில்+கொடி | = விற்கொடி | – ல்-ற் – திரிதல் |
| மனம்+மகிழ்ச்சி | = மனமகிழ்ச்சி | – ம்-கெடுதல் |
| நாடகம்+கலை | = நாடகக்கலை | – ம்-கெடுதல், க்- தோன்றல் |



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம்.

இராணிப்பேட்டை மாவட்டம்.

## மூன்றாம் பருவம் - எட்டாம் வகுப்பு (2019 - 2020)

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு இலக்கண வரைபடங்கள்

## இயல் – 1

### வல்லினம் மிகும் இடங்களும் (க், ச், த், ப்), மிகா இடங்களும்

| வ. எண் | வல்லினம் க், ச், த், ப் மிகும் இடங்கள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 1. | **அந்த, இந்த** என்னும் சுட்டுத்திரிபுகளுக்குப் பின் வல்லினம் மிகும் | இந்தக் காலம்<br>அந்தப் பக்கம் |
| 2. | **எந்த** என்னும் வினாத்திரிபுபின் வல்லினம் மிகும் | எந்தப்பயணம்?<br>எந்தத்திசை? |
| 3. | **ஐ** - இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும் | பாடத்தைப் படி<br>கதவைத் திற |
| 4. | **கு** - நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும் | எனக்குத் தெரியும்<br>ஊருக்குச் செல் |
| 5. | **அகர (அ), இகர (இ)** ஈற்று வினையெச்சங்கள் பின் வல்லினம் மிகும் | ஆடச் சொன்னார்<br>ஓடிப் போனார் |
| 6. | **வன்தொடர்க் குற்றியலுகரம்** (கு, சு, டு, து, பு, று) பின் வல்லினம் மிகும் | பெற்றுக் கொண்டேன்<br>படித்துப் பார்த்தார் |
| 7. | **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்** பின் வல்லினம் மிகும் | செல்லாக் காசு<br>ஓடாக் குதிரை |
| 8. | **உவமைத்தொகை**யில் வல்லினம் மிகும் | தாய்த்தமிழ்<br>மலர்ப்பாதம் |
| 9. | **உருவ**கத்தில் வல்லினம் மிகும் | தாமிழ்த்தாய்<br>உலகப் பந்து |
| 10. | **எட்டு, பத்து - எண்ணுப்** பெயர்களின் பின் வல்லினம் மிகும் | எட்டுத்தொகை<br>பத்துப்பாட்டு |



**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம்.

இராணிப்பேட்டை மாவட்டம்.

## மூன்றாம் பருவம் - எட்டாம் வகுப்பு (2019 - 2020)

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு இலக்கண வரைபடங்கள்

### வல்லினம் மிகும் இடங்களும் (க், ச், த், ப்), மிகா இடங்களும்

| வ. எண் | வல்லினம் க், ச், த், ப் மிகும் இடங்கள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 11. | **அப்படி, இப்படி, எப்படி** ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும் | அப்படிச் செய்<br>இப்படிக் காட்டு |
| 12. | **திசைப் பெயர்களின்** பின் வல்லினம் மிகும் | கிழக்குக் கடல்<br>தெற்குப் பக்கம் |
| 13. | **மகரமெய்** கெட்டு வல்லினம் மிகும் | மரம் + சட்டம்<br>மரச்சட்டம் |
| 14. | **இருபெயரெட்டுப்** பண்புத் தொகையில் வல்லினம் மிகும் | மல்லிகைப்பூ<br>சித்திரைத்திங்கள் |
| 15. | **ஓரெழுத்து** ஒருமொழிக்குப் பின் வல்லினம் மிகும் | தைத்திங்கள்<br>பூப்பந்தல் |
| 16. | **என, ஆக** - சொல்லுருபுகளின் பின் வல்லினம் மிகும் | எனக்கேட்டார்<br>வருவதாகக்கூறு |
| 17. | **அதற்கு, இதற்கு, எதற்கு** - சொற்களின் பின் வல்லினம் மிகும் | அதற்குக்கொடு<br>எதற்குக்கேட்கிறாய்? |
| 18. | **இனி, தனி** சொற்களின் பின் வல்லினம் மிகும் | தனிச்சிறப்பு<br>இனிக்காண்போம் |
| 19. | **மிக** - சொல்லின் பின் வல்லினம் மிகும் | மிகப் பெரியவர் |
| 20. | **சால, தவ, தட, குழ** உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும் | சாலப் பேசினார்<br>தவச்சிறிது |

இயல் : 1-2

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம்.

இராணிப்பேட்டை மாவட்டம்.

## மூன்றாம் பருவம் - எட்டாம் வகுப்பு (2019 - 2020)

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு இலக்கண வரைபடங்கள்

## வல்லினம் மிகும் இடங்களும் (க், ச், த், ப்), மிகா இடங்களும்

| வ. எண் | வல்லினம் மிகா இடங்கள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 1. | **எழுவாய்த்(பெயர்) தொடர்**களில் வல்லினம் மிகாது | தம்பி படித்தான்<br>கிளிபேசும் |
| 2. | **அது**, **இது**, **எது**, சொற்களை அடுத்து வல்லினம் மிகாது | அது செய்<br>எது சென்றது? |
| 3. | **பெயரெச்சம்**, **எதிர்மறைப் பெயரெச்சம்** பின் வல்லினம் மிகாது | எழுதியபாடல்<br>எழுதாத பாடல் |
| 4. | **இரண்டாம் வேற்றுமைத்தொகை**யில் வல்லினம் மிகாது | நாடு கண்டான்<br>காய் தின்றேன் |
| 5. | **மென்தொடர்**, **இடைத்தொடர்க் குற்றியலுகரங்களில்** வல்லினம் மிகாது | தின்று தீர்த்தான்<br>செய்து பார்த்தான் |
| 6. | **வினைத்தொகை**யில் வல்லினம் மிகாது | எழுதுபொருள்<br>சுடுசோறு |
| 7. | **படி**வினையெச்சத்தில் வல்லினம் மிகாது | பாடும்படி கேட்டாள்<br>வரும்படி சொன்னார் |
| 8. | **விளித்தொடரில்** வல்லினம் மிகாது | மகனே படி |
| 9. | **வியங்கோள் வினைமுற்று**த் தொடரில் வல்லினம் மிகாது | வாழ்க தமிழ்<br>வருக தலைவா! |
| 10. | **அன்று**, **இன்று**, **என்று** - சொற்களின் பின் வல்லினம் மிகாது | அன்று சொன்னார்<br>என்று தருவார்? |

இயல் : 1-3

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம்.
## இராணிப்பேட்டை மாவட்டம்.
## மூன்றாம் பருவம் - எட்டாம் வகுப்பு (2019 - 2020)
## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு இலக்கண வரைபடங்கள்

### வல்லினம் மிகும் இடங்களும் (க், ச், த், ப்), மிகா இடங்களும்

| வ. எண் | வல்லினம் மிகா இடங்கள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 11. | **அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு** - சொற்களின் பின் வல்லினம் மிகாது | அவ்வளவு பெரியது?<br>எவ்வளவு சிறியது? |
| 12. | **அத்தனை, இத்தனை, எத்தனை** - சொற்களின் பின் வல்லினம் மிகாது | இத்தனை சிறியது<br>எத்தனை பெரியது? |
| 13. | எட்டு, பத்து தவிர **பிற எண்ணுப்பெயர்களு**டன் வல்லினம் மிகாது | ஒரு புத்தகம்<br>மூன்று கோடி |
| 14. | **அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி**யில் வல்லினம் மிகாது | பார் பார்<br>சல சல |
| 15. | **கள் விகுதி**சேரும் போதுவல்லினம் மிகாது | வாழ்த்துகள் |
| 16. | **உறு, நனி, கூர், கழி, கடி** உரிச்சொற்களில் வல்லினம் மிகாது | உறுபொருள்<br>கடிகாவல் |
| 17. | **உம்மைத்தொகை**யில் வல்லினம் மிகாது | தாய் தந்தை |
| 18. | **மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றமைத்தொடர்**களில் வல்லினம் மிகாது | என்னோடு சேர்<br>மரத்திலிருந்து பறி<br>குரங்கினது குட்டி |
| 19. | **இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் வேற்றுமைத்தொகை**களில் வல்லினம் மிகாது | தமிழ் படி(ஐ)<br>கைதட்டு (ஆல்)<br>வீடு சென்றான் (கு) |
| 20. | **உயர்திணை பெயர்த்தொகை**யில் வல்லினம் மிகாது | தலைவன் கூற்று<br>தலைவி கூற்று |

இயல் : 1-4

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 2

## யாப்பு இலக்கணம்

### யாப்பு வேறு பெயர்கள்

| | |
|---|---|
| செய்யுள் | தூக்கு |
| தொடர்பு | பண் |
| பாட்டு | பா |
| கவிதை | கவி |






செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# மூன்றாம் பருவம் - எட்டாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு இலக்கண வரைபடங்கள்

### எழுத்து (247)
மூன்று வகைப்படும்

- குறில் (95)
- நெடில் (133)
- ஒற்று (19)

| உயிர்க்குறில் | உயிர்மெய்க் குறில் | உயிர்நெடில் | உயிர்மெய் நெடில் | மெய் | ஆய்தம் |
|---|---|---|---|---|---|
| 5 | 90 | 7 | 126 | 18 | 1 |

### அசை
இரு வகைப்படும்

எழுத்துகள் ஒன்றோ, சிலவோ சேர்வது அசை

- நேரசை
- நிரையசை

### நேரசைக்கு உரிய எழுத்துகள்

1. குறில் தனித்து வந்தால் - நேர் → ந
2. குறில் ஒற்று சேர்ந்து வந்தால் - நேர் → நம்
3. நெடில் தனித்து வந்தால் - நேர் → நா
4. நெடில் ஒற்று சேர்ந்து வந்தால் - நேர் → நாம்

இயல் : 2-2

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# மூன்றாம் பருவம் - எட்டாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு இலக்கண வரைபடங்கள்

### நிரையசைக்கு உரிய எழுத்துகள்

| | |
|---|---|
| 1. இரண்டு குறில் இணைந்து வந்தால் - நிரை | கட |
| 2. இரண்டு குறிலுடன் ஒற்று சேர்ந்து வந்தால் - நிரை | கடல் |
| 3. குறில் நெடில் இணைந்து வந்தால் - நிரை | கலா |
| 4. குறில் நெடிலுடன் ஒற்று சேர்ந்து வந்தால் - நிரை | கலாம் |

### சீர்

ஓர் அசையோ பல அசைகளோ வந்தால் சீர்

### சீர்கள்

| | |
|---|---|
| 1. நாள், மலர், காசு, பிறப்பு - ஓரசைச்சீர்கள் | 4 வகை |
| 2. மாச்சீர், விளச்சீர் - ஈரசைச்சீர்கள் | 4 வகை |
| 3. காய்ச்சீர், கனிச்சீர் - மூவசைச்சீர்கள் | 8 வகை |
| 4. பூச்சீர், நிழற்சீர் - நாலசைச்சீர்கள் | 16 வகை |

இயல் : 2-3

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# தளை

**சீர்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவது தளை**

முதல் சீரின் இறுதியிலும், வருஞ்சீரின் முதலிலும்
உள்ள அசைகள் சேர்வது தளை ஆகும்

## தளை
ஏழு வகைப்படும்

1. நேரொன்றாசிரியத்தளை
2. நிரையொன்றாசியத்தளை
3. இயற்சீர்வெண்டளை
4. வெண்சீர் வெண்டளை
5. கலித்தளை
6. ஒன்றிய வஞ்சித்தளை
7. ஒன்றாத வஞ்சித்தளை

இயல் : 2-4

# மூன்றாம் பருவம் - எட்டாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு இலக்கண வரைபடங்கள்

### அடி

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட
சீர்களைக் கொண்டது அடி

### அடி

**ஐந்து** வகைப்படும்

| | |
|---|---|
| 1. **குறளடி** | ஓரடியில் இரண்டு சீர்கள் வரும் |
| 2. **சிந்தடி** | ஓரடியில் மூன்று சீர்கள் வரும் |
| 3. **அளவடி (அ) நேரடி** | ஓரடியில் நான்கு சீர்கள் வரும் |
| 4. **நெடிலடி** | ஓரடியில் ஐந்து சீர்கள் வரும் |
| 5. **கழி நெடிலடி** | ஓரடியில் ஐந்து சீர்களுக்கு மேல் வரும் |

### தொடை

சீர்களிலும் அடிகளிலும் ஓசை இன்பமும் பொருள் இன்பமும்
தோன்றும் வகையில் அமைவது தொடை

### தொடை

**எட்டு** வகைப்படும்

| | |
|---|---|
| 1. **மோனைத் தொடை** | முதலெழுத்து / முதலசை |
| 2. **இயைபுத் தொடை** | இறுதி எழுத்து / அசை / சீர் |
| 3. **எதுகைத் தொடை** | இரண்டாம் எழுத்து |
| 4. **முரண்தொடை** | சொல் (அ) பொருள் மாறுபடும் |
| 5. **அளபெடைத்தொடை** | உயிர் / மெய் எழுத்துகள் அளபெடுக்கும் |
| 6. **அந்தாதித்தொடை** | இறுதியே முதலாகும் |
| 7. **இரட்டைத்தொடை** | ஒரே சொல் வருவது |
| 8. **செந்தொடை** | வேறுபடுவது |

இயல் : 2-5

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# மூன்றாம் பருவம் - எட்டாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு இலக்கண வரைபடங்கள்

### மோனைத் தொடை
எட்டு வகைப்படும்

| | |
|---|---|
| 1. அடி மோனை | ( அடி தோறும் ) முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது |
| 2. இணை மோனை | ( 1,2 ) சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது |
| 3. பொழிப்பு மோனை | ( 1,3 ) சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது |
| 4. ஒரூஉ மோனை | ( 1,4 ) சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது |
| 5. கூழை மோனை | ( 1,2,3 ) சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது |
| 6. மேற்கதுவாய் மோனை | ( 1,3,4 ) சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது |
| 7. கீழ்க்கதுவாய் மோனை | ( 1,2,4 ) சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது |
| 8. முற்று மோனை | ( 1,2,3,4 ) சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது |

### பா
நான்கு வகைப்படும்

1. வெண்பா
2. ஆசிரியப்பா
3. கலிப்பா
4. வஞ்சிப்பா

| பா | ஓசை | நூல்கள் |
|---|---|---|
| 1. வெண்பா | செப்பல் | அறநூல்கள் |
| 2. ஆசிரியப்பா | அகவல் | சங்க இலக்கியங்கள் |
| 3. கலிப்பா | துள்ளல் | கலித்தொகை |
| 4. வஞ்சிப்பா | தூங்கல் | சில பாடல்கள் |

இயல் : 2-6

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 3

## அணி இலக்கணம்
(அணி - செய்யுளுக்கு அழகு)

## 1. பிறிது மொழிதல் அணி:

செய்யுளில் உவமையை மட்டும் கூறி, கூற வந்த கருத்தை உணர வைப்பது **பிறிது மொழிதல் அணி** ஆகும்.

எ.கா : கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

அணி விளக்கம் : இக்குறட்பாவில், **தேர் கடலில் ஓடாது, கப்பல் நிலத்தில் ஓடாது** என்ற உவமையைக் கூறி. தமக்கு உரிய இடத்தில் வெற்றி பெற முடியும்; தமக்கு உரிய இடம் இல்லாத இடத்தில் வெற்றி பெற முடியாது என்று உணர வைப்பதால், இது **பிறிது மொழிதல் அணி** ஆகும்.

## 2. வேற்றுமை அணி:

செய்யுளில் இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் கூறுவது **வேற்றுமையணி** ஆகும்

எ.கா : தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

அணி விளக்கம்: இக்குறட்பாவில் **தீப்புண்; நாப்புண்** என்று இரண்டு புண்களைக் கூறி. இதில் தீப்புண் ஆறும்; நாப்புண் ஆறாது என்று வேறுபடுத்திக் கூறுவதால்; இது **வேற்றுமையணி** ஆகும்.



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## 3. இரட்டுற மொழிதல் அணி:

செய்யுளில் ஒரு சொல் அல்லது தொடர் **இருபொருள் தருமாறு** அமைவது **இரட்டுறமொழிதல் அணி** அல்லது **சிலேடை அணி** என்பர்.

எ.கா : ஓடும் இருக்கும் அடினுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலைதனக்கு நாணாது – சேடியே
தீய்காயது இல்லா திருமலைரா யன்வரையில்
தேய்காயும் நாயும்நேர் செப்பு





| | தேங்காய் | இருபொருள் தரும் தொடர்கள் | நாய் |
|---|---|---|---|
| 1. | தேங்காயில் ஓடு இருக்கும் | ஓடும் இருக்கும் | நாய் சிலநேரம் ஓடிக்கொண்டிருக்கும் சிலநேரம் படுத்திருக்கும் |
| 2. | உட்பகுதி வெண்மை நிறத்தில் இருக்கும் | உள்வாய் வெளுத்திருக்கும் | வாயின் உட்பகுதி வெண்மையாக இருக்கும் |
| 3. | கோணல் இல்லாமல் குலையாகத் தொடங்கும் | குலைதனக்கு நாணாது | குரைப்பதற்கு வெட்கப்படாது |

இதில் இரு பொருள்பட வந்துள்ளதால் இது, **இரட்டுறமொழிதல் அணி** ஆகும்.

## 4. பிறிது மொழிதல் அணி:

எ.கா : கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது

அணி விளக்கம்: ஓடும் முயல் மீது அம்பை எய்தலை விட, நின்ற யானை மேல் எறிந்து தவறிய வேலை ஏந்துதல் இனிது என்ற உவமையைக் கூறி, புறமுதுகு காட்டி ஓடும் சிற்றரசனை விடுத்து. எதிர் நிற்கும் பேரரசன் மேல் எறிந்து, தவறிய வேலை ஏந்துதல் இனிது, என்று உணர வைப்பதால்; இது, **பிறிது மொழிதல் அணி** ஆகும்.



**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## 5. உவமையணி:

செய்யுளில் **உவமானம்**, **உவமேயம்**, **உவம உருபு** ஆகிய மூன்றும் வெளிப்படையாக வருவது **உவமையணி** ஆகும்.

எ.கா : 1. **நவில்தொறும் நூல்நயம்** **போலும்** **பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு**

இக்குறட்பாவில் **நவில்தொறும் நூல்நயம்** என்பது **உவமானம்.** **பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு** என்பது **உவமேயம்.** **போலும் - உவம உருபு** எனவே, இது **உவமையணி** ஆகும்.

எ.கா : 2. **பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம்** **நன்பால்**
**கலம்தீமை யால்திரிந்து** **அற்று**

இக்குறட்பாவில் **நன்பால் கலம் தீமையால் திரிந்து** என்பது **உவமானம்.** **பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம்** என்பது **உவமேயம்.** **அற்று - உவமஉருபு** எனவே, இது **உவமையணி** ஆகும்.

எ.கா : 3. **சமன்செய்து சீர்தூக்கும் கோல்** **போல்** **அமைந்து ஒருபால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி**

இக்குறட்பாவில் **சமன்செய்து சீர்தூக்கும் கோல்** என்பது **உவமானம்.** **அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி** என்பது **உவமேயம்.** **போல் - உவமஉருபு** எனவே, இது **உவமையணி** ஆகும்.

எ.கா : 4. **வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை** **எரிமுன்னர்**
**வைத்தூறு** **போலக்** **கெடும்**

இக்குறட்பாவில் **எரிமுன்னர் வைத்தூறு** என்பது **உவமானம்.** **வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை** என்பது **உவமேயம்.** **போல - உவமஉருபு.**
**கெடும்** - பொதுத்தன்மை எனவே, இது **உவமையணி** ஆகும்.

இயல் : 3-3

## 6. இல் பொருள் உவமையணி:

உலகில் இல்லாத பொருளையோ, செயலையோ கற்பனை செய்து உவமையாகக் கூறுவது, **இல்பொருள் உவமையணி** ஆகும்.

எ.கா : வலியில் நிலைமையான் வல்லுரும் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

அணி விளக்கம்: தன் மனம் அடக்கமில்லான் பிறர்க்கு உரிய மகளிரை விரும்புதல், பசு புலித்தோலைப் போர்த்திக்கொண்டு **பசு புல்லை விட்டுவிட்டுப் பிறர்க்குரிய பயிரை மேய்ந்தது** போன்று, இதில் உலகில் இல்லாத செயலை உவமைப்படுததிக் கூறியதால், இது **இல்பொருள் உவமையணி** ஆகும்.

### உவமை அணியின் பொது இலக்கணம்:

பண்பும் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளோடு பொருள்புணர்த்(து)
ஒப்புமை தோன்றச் செப்புவ(து) உவமை : 29

### வேற்றுமையணியின் இலக்கணம்:

கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை அதுவே
தண்டியலங்காரம் : 42

### சிலேடை அணியின் இலக்கணம்:

ஒருவகைச் சொற்றொடர் பலபொருள் பெற்றி
தெரி(வு)தர வருவது சிலேடை ஆகும் : 74



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 1

## தொடர் இலக்கணம்

**1. எழுவாய்** - பெயர்ச்சொல்

- **எட்வர்டு** வந்தான்
- **முருகன்** சென்றான்
- **முகமது** செய்தான்

இந்தச் சொற்றொடர்களில்
பெயர்ச் சொற்கள்
**எட்வர்டு, முருகன், முகமது.**
இந்தப் **பெயர்ச்சொற்கள்**
**எழுவாய்** ஆகும்.

**2. பயனிலை** - **வினைச்சொல்**

கனகாம்பரம்
**பூத்தது**

இதில் வினைச்சொல்
**பூத்தது**
இந்த **வினைச்சொல்**
**பயனிலை** ஆகும்.



**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

**3. செய்படுபொருள்**
அடிப்படைப்பொருள்

மீனா
**கனகாம்பரத்தைச்**
சூடினாள்

மீனா – எழுவாய்

**கனகாம்பரம்**
செயப்படுபொருள்

சூடினாள் – பயனிலை

எழுவாய் ஒரு வினையைச் செய்ய அதற்கு **அடிப்படை**யாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட **பொருளே செயப்படுபொருள்.**

**4. தோன்றா எழுவாய்**
எழுவாய் வெளிப்படையாகத் தெரியாது




இதில் **நீ** என்னும் எழுவாய் **வெளிப்படையாகத் தெரியவில்லை** இதைத் **தோன்றா எழுவாய்** ஆகும்.

**5.வினைப் பயனிலை**
வினைமுற்று பயனிலையாக வரும்




இதில் **வரைந்தேன்** என்ற **வினைமுற்று** பயனிலையாக வந்தது. இது **வினைப்பயனிலை** ஆகும்.

இயல் – 1-2


**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

**6. பெயர்ப் பயனிலை**
பெயர்ச்சொல் பயனிலையாக வரும்

→ சொன்னவள் **கலா**

→ இதில் **கலா** – பெயர்ச்சொல், **பயனிலை**யாக வந்துள்ளது. இது **பெயர்ப் பயனிலை** ஆகும்.

**7. வினாப் பயனிலை**
வினாச்சொல் பயனிலையாக வரும்

→ விளையாடுபவன் **யார்?**



→ இதில் **யார்?** என்னும் வினாச்சொல் **பயனிலை**யாக வந்துள்ளது. இது **வினாப் பயனிலை** ஆகும்

**8. பெயரடை**
எழுவாய்க்கு (பெயர்ச்சொல்லுக்கு) அடையாக வரும்.

→ **நல்ல** நூல் ஒன்று படித்தேன்



→ இதில் **நல்ல** என்னும் சொல் எழுவாயாக வரும் நூல் என்ற **பெயர்ச் சொல்லுக்கு அடையாக** வருகிறது. எனவே, இது **பெயரடை** என்பர்.

இயல் - 1-3

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

**9. வினையடை**
வினைப் பயனிலைக்கு அடையாக வரும்.

→ மகிழ்நன் **மெல்ல** வந்தான்

→ இதில் **மெல்ல** என்னும் சொல் வந்தான் என்னும் **வினைப் பயனிலைக்கு அடையாக** வருகிறது. எனவே, இதை **வினையடை** என்பர்

**10. தன்வினை**

எழுவாய் ஒருவினையைச் செய்தால் அது **தன்வினை** ஆகும்.

எ.கா.: அவன் **திருந்தினான்**

**11. பிறவினை**
எழுவாய் ஒருவினையைச் செய்ய வைத்தால், அது பிறவினை ஆகும்

→ எ.கா.: அவனைத் **திருத்தச் செய்தான்**

→ எழுவாய் ஒருவினையைச் செய்யவைத்தால் அது **பிறவினை** ஆகும். **வி.பி.** போன்ற **விகுதி**களைக் கொண்டுவரும்.

இயல் - 1-4

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### பயன்பாட்டுத் தொடர்கள் அறிவோம்

#### 12. தொடர் அமைப்பின் சிறப்புகள்

| | | | |
|---|---|---|---|
| எ.கா: 1 | நான் | பாடத்தைப் | படித்தேன் |
| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
| எ.கா: 2 | பாடத்தை | நான் | படித்தேன் |
| | செயப்படுபொருள் | எழுவாய் | பயனிலை |
| எ.கா: 3 | படித்தேன் | நான் | பாடத்தை |
| | பயனிலை | எழுவாய் | செயப்படுபொருள் |
| எ.கா: 4 | நான் | படித்தேன் | பாடத்தை |
| | எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
| எ.கா: 5 | பாடத்தைப் | படித்தேன் | நான் |
| | செயப்படுபொருள் | பயனிலை | எழுவாய் |
| எ.கா: 6 | படித்தேன் | பாடத்தை | நான் |
| | பயனிலை | செயப்படுபொருள் | எழுவாய் |

இயல் - 1-5

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## பயன்பாட்டுத் தொடர்கள் அறிவோம்

| | 13. செய்வினைத்தொடர் | செயப்பாட்டுவினைத்தொடர் |
|---|---|---|
| 1. | திருவள்ளுவர் திருக்குற**ளை** இயற்றினார் | திருக்குறள் திருவள்ளுவ**ரால்** **இயற்றப்பட்டது** |
| 2. | பாவை முதல்பரி**சைப்** பெற்றாள் | முதல்பரிசு பாவை**யால்** **பெறப்பட்டது** |
| 3. | இராசராசன் தஞ்சைப்பெரியகோயி**லைக்** கட்டினான் | தஞ்சைப் பெரியகோவில் இராசராச**னால்** **கட்டப்பட்டது** |
| 4. | மக்கள் மழைநீ**ரைச்** சேமித்தனர் | மழைநீர் மக்க**ளால்** **சேமிக்கப்பட்டது** |
| 5. | மூவர் தேவாரத்**தை** இயற்றினர் | தேவாரம் மூவ**ரால்** **இயற்றப்பட்டது** |

| | 14. தன்வினைத்தொடர் | பிறவினைத்தொடர் |
|---|---|---|
| 1. | இளங்கோ படம் **வரைந்தான்** | இளங்கோ படம் **வரைவித்தான்** |
| 2. | மலர்விழி பாடம் **படித்தாள்** | மலர்விழி பாடம் **படிப்பித்தாள்** |
| 3. | ஓவியா திருக்குறள் **பயின்றாள்** | ஓவியா திருக்குறள் **பயிற்றுவித்தாள்** |
| 4. | மாறன் மாட்டை **ஓட்டினான்** | மாறன் மாட்டை **ஓட்டுவித்தான்.** |
| 5. | தாய் குழந்தைக்கு உணவு **ஊட்டினாள்** | தாய் குழந்தைக்கு உணவு **ஊட்டுவித்தாள்** |

இயல் - 1-6

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### பயன்பாட்டுத் தொடர்கள் அறிவோம்

| | 15. செய்தித்தொடர் | உணர்ச்சித்தொடர் |
|---|---|---|
| 1. | பாவேந்தரின் பாட்டுத்திறன் மிகவும் நன்று | **என்னே!** பாவேந்தரின் **பாட்டுத்திறன்!** |
| 2. | மாமல்லபுரச் சிற்பங்கள் அழகாக உள்ளன | **என்னே!** மாமல்லபுரச் சிறப்பங்களின் **அழகு!** |
| 3. | வானத்து விண்மீன்கள் மிக அழகாக உள்ளன | **ஆ!** வானத்து விண்மீன்கள் என்ன **அழகு!** |
| 4. | பேரறிஞர் அண்ணா மறைந்தார் | **ஐயோ!** பேரறிஞர் அண்ணா **மறைந்தாரே!** |
| 5. | கோடைக்கால வெப்பம் கடுமையாக இருக்கிறது | **ஐயோ!** கோடைக்கால வெப்பம் **கடுமை!** |

| | 16. கட்டளைத்தொடர்கள் | செய்தித்தொடர் |
|---|---|---|
| 1. | இளைமையில் **கல்** | இளமையில் **கற்க வேண்டும்** |
| 2. | அறம் செய **விரும்பு** | அறம் செய்ய **விரும்ப வேண்டும்** |
| 3. | மாலையில் **விளையாடு** | மாலையில் **விளையாட வேண்டும்** |
| 4. | திருக்குறள் **படி** | திருக்குறளைப் **படிக்க வேண்டும்** |
| 5. | நாள்தோறும் நன்மை **செய்** | நாள்தோறும் நன்மை **செய்ய வேண்டும்** |

இயல் - 1-7

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

**ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)**

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

# பகுபத உறுப்பிலக்கணம்

(உறுப்புகள் ஆறு)

### 1. பகுதி

**பகுதி வேறுபெயர் முதனிலை**

1. சொல்லின் முதலில் வரும்
2. பகாப்பதமாக இருக்கும்
3. கட்டளைப் பொருளைத் தரும்

### 2. விகுதி

**விகுதி வேறுபெயர் இறுதிநிலை**

1. சொல்லின் இறுதியில் வரும்
2. திணை, பால், எண், இடம் காட்டும்

### 3. இடைநிலை

1. பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வரும்
2. காலம் காட்டும்
3. எதிர்மறையிலும் வரலாம்
4. விகாரம் வரலாம்

### 4. சந்தி

1. பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்
2. மெய்எழுத்தாக இருக்கும்

### 5. சாரியை

1. இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்
2. சந்திக்கும் விகுதிக்கும் இடையிலும் வரலாம்

### 6. விகாரம்

1. பகுபத உறுப்பிகளில் ஏற்படும் மாற்றங்கள் ஆகும்

## 1. பகுதி (முதனிலை)

| | | | |
|---|---|---|---|
| **வந்த** | வா (வ) + த் (ந்) + த் + அ | வா – பகுதி | 1. சொல்லின் முதலில் வரும்.<br>2. பகாப்பதமாக இருக்கும்.<br>3. கட்டளைப் பொருளைத் தரும். |

இயல் – 1-8

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# 2. விகுதி (இறுதிநிலை)

| | | | |
|---|---|---|---|
| **செய்தான்** | செய்+த்+ஆன் | ஆன் – **ஆண்பால்** வினைமுற்று விகுதி | 1. சொல்லின் இறுதியில் வரும்<br>2. திணை, பால், எண், இடம் காட்டும் |

## விகுதி வகைகள்

| வ.எண் | செய்**தனன்** | **அன்** | |
|---|---|---|---|
| 1 | செய்**தான்** | **ஆன்** | **ஆண்பால்** வினைமுற்று விகுதி |

| வ.எண் | நடந்**தனள்** | **அள்** | |
|---|---|---|---|
| 2 | நடந்**தாள்** | **ஆள்** | **பெண்பால்** வினைமுற்று விகுதி |

| வ.எண் | படித்**தனர்** | **அர்** | |
|---|---|---|---|
| 3 | படித்**தார்** | **ஆர்** | **பலர்பால்** வினைமுற்று விகுதி |

| வ.எண் | நடந்த**து** | **து** | |
|---|---|---|---|
| 4 | உயிற்**று** | **று** | **ஒன்றன்பால்** வினைமுற்று விகுதி |

| வ.எண் | பறந்**தன** | **அ** | |
|---|---|---|---|
| 5 | நட**வா** | **ஆ** | **பலவின்பால்** வினைமுற்று விகுதி |

| வ.எண் | கண்**டென்** | **என்** | |
|---|---|---|---|
| 6 | கண்**டேன்** | **ஏன்** | **தன்மை ஒருமை** வினைமுற்று விகுதி |

இயல் - 1-9

# ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

| வ.எண் | நடப்**பம்** | **அம்** | |
|---|---|---|---|
| 7 | நடப்**பாம்** | **ஆம்** | **தன்மைப்பன்மை** வினைமுற்று விகுதி |
| | நடப்**பெம்** | **எம்** | |
| | நடப்**பேம்** | **ஏம்** | |
| | நடப்**போம்** | **ஓம்** | |

| வ.எண் | கண்ட**னை** | **ஐ** | |
|---|---|---|---|
| 8 | கண்**டாய்** | **ஆய்** | **முன்னிலை ஒருமை** வினைமுற்று விகுதி |
| | நடத்**தி** | **இ** | |

| வ.எண் | செய்த**னிர்** | **இர்** | |
|---|---|---|---|
| 9 | செய்**தீர்** | **ஈர்** | **முன்னிலைப்பன்மை** வினைமுற்று விகுதி |
| | செய்**மின்** | **மின்** | |

| வ.எண் | அழ**கிய** | **அ** | |
|---|---|---|---|
| 10 | பேசு**ம்** | **உம்** | **பெயரெச்ச** விகுதி |

| வ.எண் | வந்**து** | **உ** | |
|---|---|---|---|
| 11 | தே**டி** | **இ** | **வினையெச்ச** விகுதி |

| வ.எண் | வாழ்**க** | **க** | |
|---|---|---|---|
| 12 | வா**ழிய** | **இய** | **வியங்கோள்** வினைமுற்று விகுதி |
| | வா**ழியர்** | **இயர்** | |

இயல் - 1-10

| வ.எண் | நடத்**தல்** | **தல்** | |
|---|---|---|---|
| 13 | ஆ**டல்** | **அல்** | **தொழிற்பெயர்** விகுதி |
| | கொ**லை** | **ஐ** | |
| | நடக்**கை** | **கை** | |
| | புணர்ச்**சி** | **சி** | |
| | நடப்**பு** | **பு** | |
| | மற**தி** | **தி** | |
| | போக்**கு** | **கு** | |
| | புல**வி** | **வி** | |
| | சாக்**காடு** | **காடு** | |
| | கோட்**பாடு** | **பாடு** | |

| வ.எண் | வெல்வார்**கள்** | **கள்** | **விகுதி மேல்** விகுதி |
|---|---|---|---|
| 14 | | | |

## விகுதிகள்

**அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம்மார்**
**அ ஆ கு டு து று என் ஏன் அல் அன்**
**அம் ஆம் எம் ஏம் ஓமோ டும்மூர்**
**க ட த ற ஐ ஆய் இம்மின் இர்ஈர்**
**ஈயர் கயவு மென்பவும் பிறவும்**
**வினையின் விகுதி பெயரினும் சிலவே**

- நன்னூல் நூற்பா : 140



**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

## 3. இடைநிலைகள்

1. பகுதிக்கும் விகுதிக்கும் இடையில்.
2. காலம் காட்டும்.
3. எதிர்மறையிலும் வரலாம்.
4. விகாரம் வரலாம்.

| இறந்தகால இடைநிலை | | | |
|---|---|---|---|
| **ட், த், ற், ன், இன்** | | | |
| 1. | உண்டான் | உண்+**ட்**+ஆன் | **ட்** |
| 2. | செய்தாள் | செய்+**த்**+ஆள் | **த்** |
| 3. | சென்றார் | செல்(ன்)+**ற்**+ஆர் | **ற்** |
| 4. | சொன்னான் | சொல்(ன்)+**ன்**+ஆன் | **ன்** |
| 5. | எழுதினாள் | எழுது+**இன்**+ஆள் | **இன்** |

| நிகழ்கால இடைநிலை | | |
|---|---|---|
| **கிறு, கின்று, ஆநின்று** | | |
| படிக்கிறான் | படி+க்+**கிறு**+ஆன் | **கிறு** |
| காண்கின்றார் | காண்+**கின்று**+ஆர் | **கின்று** |
| நடவாநின்றாள் | நட+வ்+**ஆநின்று**+ஆள் | **ஆநின்று** |

| எதிர்கால இடைநிலை | | |
|---|---|---|
| **க், ப், வ்** | | |
| பூக்கும் | பூ+க்+**க்**+உம் | **க்** |
| காண்பர் | காண்+**ப்**+அர் | **ப்** |
| வருவாள் | வா(வரு)+**வ்**+ஆள் | **வ்** |

| எதிர்மறை இடைநிலை | | | |
|---|---|---|---|
| **ஆ. அல், இல்** | | | |
| 1. | பறிக்காதீர் | பறி+க்+க்+**ஆ**+த்+ஈர் | **ஆ** |
| 2. | செய்யற்க | செய்+ய்+**அல்**(ற்)+க | **அல்** |
| 3. | கண்டிலேன் | காண்(கண்)+ட்+**இல்**+ஏன் | **இல்** |
| 4. | | | |

| பெயர் இடைநிலை | | |
|---|---|---|
| **ச், ஞ், த், வ்** | | |
| மகிழ்ச்சி | மகிழ்+**ச்**+சி | **ச்** |
| அறிஞர் | அறி+**ஞ்**+அர் | **ஞ்** |
| பாணத்தி | பாண+**த்**+தி | **த்** |
| ஓதுவான் | ஓது+**வ்**+ஆன் | **வ்** |

இயல் - 1-12

## 4. சந்தி

1. பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்.
2. பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் **மெய்** எழுத்தாக இருக்கும்.
3. பகுதிக்கும் சாரியைக்கும் இடையில் வரலாம்.

| க், த், த்(ந்), ப் | | | |
|---|---|---|---|
| 1. | உய்க்கும் | உய்+க்+க்+உம் | க் |
| 2. | படித்தார் | படி+த்+த்+ஆர் | த் |
| 3. | நடந்தான் | நட+த்(ந்)+த்+ஆன் | த்(ந்) |
| 4. | படிப்பாள் | படி+ப்+ப்+ஆன் | ப் |

## 5. சாரியை

1. இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.
2. சந்திக்கும் விகுதிக்கும் இடையிலும் வரலாம்.

| அ, அன், உ | | | |
|---|---|---|---|
| 1. | வந்தது | வா(வ)+த்(ந்)+த்+**அ**+து | **அ** |
| 2. | படித்தான் | படி+த்+த்+**அன்**+அன் | **அன்** |
| 3. | சொல்லுக | சொல்+ல்+**உ**+க | **உ** |

## எழுத்துப் பேறு

1. காலத்தை உணத்தாது
2. மெய்யெழுத்தாக **த்** வரும்
3. இரு உயிர் எழுத்துகளின் இடையில் வரும்

| த் | | |
|---|---|---|
| செய்யாதே | செய்+ய்+ஆ+த்+ஏ | த் - எழுத்துப்பேறு |

இயல் - 1-13

# 6. விகாரம்

## பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றங்கள்

1. பகுதியில் **நெடில்** எழுத்து, **குறில்** எழுத்தாக இருக்கலாம்.
2. பகுதியில் **ஒரு மெய்** எழுத்துக்குப் பதில், **வேறு மெய்** எழுத்து வரலாம்.
3. சந்தியில் **த் - ந்** ஆனது விகாரம்.
4. எதிர்மறை இடைநிலையில் விகாரம் வரலாம்.

| | | |
|---|---|---|
| 1. | கண்டார்<br>**காண்(கண்)**+<br>காண் – பகுதி<br>**காண் - கண்** எனக்<br>குறுகியது விகாரம் | பகுதியில் நெடில் **கா**<br>எழுத்து, குறில் **க**<br>எழுத்தாக மாறுவது<br>**விகாரம்** |
| 2. | சொன்னார்<br>சொ**ல்(ன்)**+<br>சொல் – பகுதி<br>**ல் - ன்** ஆனது<br>விகாரம் | பகுதியில் ஒரு மெய் **ல்**<br>எழுத்துக்குப் பதில்<br>வேறொரு மெய் **ன்**<br>எழுத்து வருவது<br>**விகாரம்** |
| 3. | நடந்தார்<br>நட+**த்(ந்)**+<br>த் – சந்தி<br>த் – ந் ஆனது<br>விகாரம் | பகுதிக்குப் பக்கத்தில்<br>**ந்** என்ற மெய் **த்** என்ற<br>சந்தியாக மாறி;<br>பிறகு **த் - ந்** ஆனது<br>**விகாரம்** ஆகும் |
| 4. | செய்யற்க<br>செய்+ய்+**அல்(ற்)**+க<br>ல் – ற் ஆனது விகராம் | எதிர்மறை இடைநிலையில்<br>**ஒரு மெய்** எழுத்துக்குப்<br>பதில், **வேறொரு மெய்**<br>எழுத்தாக வருவது<br>**விகாரம்** ஆகும் |

இயல் – 1–14

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### பகுபத உறுப்பிலக்கணம்

| | | | | | | | இடைநிலை | | | | | | | | (வினைமுற்று விகுதி) விகுதி வகைகள் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ.எண் | சொற்கள் | சொற்கள் பிரிப்பு | பகுதி | விகாரம் | சந்தி | விகாரம் | இறந்தகால | நிகழ்கால | எதிர்கால | எதிர்மறை | பெயர் இடைநிலை | உடம்படுமெய் சந்தி | எழுத்துப்பேறு | சாரியை | ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் | தன்மை ஒருமை | தன்மைப் பன்மை | முன்னிலை ஒருமை | முன்னிலைப் பன்மை | வியங்கோள் | தொழிற்பெயர் விகுதி | பெயரெச்ச விகுதி | வினையெச்ச விகுதி | விகுதிமேல் விகுதி |
| 1 | வளர்ப்பாய் | வளர்+ப்+ப்+ஆய் | வளர் | | ப் | | | | ப் | | | | | | | | | | | | | ஆய் | | | | | | |
| 2 | கொள்வார் | கொள்+வ்+ஆர் | கொள் | | | | | | வ் | | | | | | | | ஆர் | | | | | | | | | | | |
| 3 | உணர்ந்த | உணர்+த்(ந்)+த்+அ | உணர் | | த் | த்-ந் | த் | | | | | | | | | | | | | | | | | | | அ | | |
| 4 | விரித்த | விரி+த்+த்+அ | விரி | | த் | | த் | | | | | | | | | | | | | | | | | | | அ | | |
| 5 | குமைந்தனை | குமை+த்(ந்)+த்+அன்+ஐ | குமை | | த் | த்-ந் | த் | | | | | | | அன் | | | | | | | | ஐ | | | | | | |
| 6 | பாய்வன | பாய்+வ்+அன்+அ | பாய் | | | | | | வ் | | | | | அன் | | | | | அ | | | | | | | | | |
| 7 | நிறுத்தல் | நிறு+த்+தல் | நிறு | | த் | | | | | | | | | | | | | | | | | | | | தல் | | | |
| 8 | கொடுத்தோர் | கொடு+த்+த்+ஓர் | கொடு | | த் | | த் | | | | | | | | | | ஓர் | | | | | | | | | | | |
| 9 | பரப்புமின் | பரப்பு+மின் | பரப்பு | | | | | | | | | | | | | | | | | | | | மின் | | | | | |
| 10 | அறைந்தனன் | அறை+த்(ந்)+த்+அன்+அன் | அறை | | த் | த்-ந் | த் | | | | | | | அன் | அன் | | | | | | | | | | | | | |
| 11 | பொருத்துங்கள் | பொருத்து+உம்+கள் | பொருத்து | | | | | | | | | | | | | | | | | | | | | | | உம் | | கள் |
| 12 | நெறிப்படுத்தினார் | நெறிப்படுத்து+இன்+ஆர் | நெறிப்படுத்து | | | | இன் | | | | | | | | | | ஆர் | | | | | | | | | | | |
| 13 | உணர்ந்தோர் | உணர்+த்(ந்)+த்+ஓர் | உணர் | | த் | த்-ந் | த் | | | | | | | | | | ஓர் | | | | | | | | | | | |
| 14 | விளைவது | விளை+வ்+அ+து | விளை | | | | | | வ் | | | | | அ | | | | து | | | | | | | | | | |
| 15 | சமைக்கின்றார் | சமை+க்+கின்று+ஆர் | சமை | | க் | | | கின்று | | | | | | | | | ஆர் | | | | | | | | | | | |
| 16 | உரையாமை | உரை+ய்+ஆ+மை | உரை | | ய் | | | | | ஆ | | | | | | | | | | | | | | | மை | | | |
| 17 | காய்க்கும் | காய்+க்+க்+உம் | காய் | | க் | | | | க் | | | | | | | | | | | | | | | | | உம் | | |
| 18 | பருகிய | பருகு+இ(ன்)+ய்+அ | பருகு | | | | இ(ன்) | | | | | ய் | | | | | | | | | | | | | | அ | | |

இயல் - 1-15

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### பகுபத உறுப்பிலக்கணம்

| | | | | | | | இடைநிலை | | | | | | | | (வினைமுற்று விகுதி) விகுதி வகைகள் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ.எண் | சொற்கள் | சொற்கள் பிரிப்பு | பகுதி | விகாரம் | சந்தி | விகாரம் | இறந்தகால | நிகழ்கால | எதிர்கால | எதிர்மறை | பெயர் | உடம்படுமெய் சந்தி | எழுத்துப்பேறு | சாரியை | ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் | தன்மை ஒருமை | தன்மைப் பன்மை | முன்னிலை ஒருமை | முன்னிலை பன்மை | வியங்கோள் | தொழிற்பெயர்விகுதி | பெயரெச்சவிகுதி | வினையெச்சவிகுதி | விகுதிமேல்விகுதி |
| 19 | பூக்கும் | பூ+க்+க்+உம் | பூ | | க் | | | | க் | | | | | | | | | | | | | | | | | உம் | | |
| 20 | தொட்டு | தொடு(தொட்டு)+உ | தொடு | | | | தொட்டு | | | | | | | | | | | | | | | | | | | | உ | |
| 21 | கண்டேன் | காண்(கண்)+ட்+ஏன் | காண் | கண் | | | ட் | | | | | | | | | | | | | ஏன் | | | | | | | | |
| 22 | இறைஞ்சி | இறைஞ்சு+இ | இறைஞ்சு | | | | | | | | | | | | | | | | | | | | | | | | இ | |
| 23 | ஓம்புவார்கள் | ஓம்பு+வ்+ஆர்+கள் | ஓம்பு | | | | | | வ் | | | | | | | | ஆர் | | | | | | | | | | | கள் |
| 24 | கொண்ட | கொள்(ண்)+ட்+அ | கொள் | ள்-ண் | | | ட் | | | | | | | | | | | | | | | | | | | அ | | |
| 25 | ஆழ்ந்த | ஆழ்+த்(ந்)+த்+அ | ஆழ் | | த் | த்-ந் | த் | | | | | | | | | | | | | | | | | | | அ | | |
| 26 | ஓங்கிய | ஓங்கு+இ(ன்)+ய்+அ | ஓங்கு | | | | இ(ன்) | | | | | ய் | | | | | | | | | | | | | | அ | | |
| 27 | மகிழ்ந்தோர் | மகிழ்+த்(ந்)+த்+ஓர் | மகிழ் | | த் | த்-ந் | த் | | | | | | | | | | ஓர் | | | | | | | | | | | |
| 28 | வேண்டி | வேண்டு+இ | வேண்டு | | | | | | | | | | | | | | | | | | | | | | | | இ | |
| 29 | போகிறது | போ+கிறு+அ+து | போ | | | | | கிறு | | | | | | அ | | | | து | | | | | | | | | | |
| 30 | மலர்ச்சி | மலர்+ச்+சி | மலர் | | | | | | | | ச் | | | | | | | | | | | | | | சி | | | |
| 31 | இணைகின்றன | இணை+கின்று+அன்+அ | இணை | | | | | கின்று | | | | | | அன் | | | | | அ | | | | | | | | | |
| 32 | போக்குக | போக்கு+க | போக்கு | | | | | | | | | | | | | | | | | | | | | க | | | | |
| 33 | சரிந்து | சரி+த்(ந்)+த்+உ | சரி | | த் | த்-ந் | த் | | | | | | | | | | | | | | | | | | | | உ | |
| 34 | உடையாள் | உடை+ய்+ஆள் | உடை | | | | | | | | | ய் | | | | ஆள் | | | | | | | | | | | | |
| 35 | பொளிக்கும் | பொளி+க்+க்+உம் | பொளி | | க் | | | | க் | | | | | | | | | | | | | | | | | உம் | | |
| 36 | படிப்போம் | படி+ப்+ப்+ஓம் | படி | | ப் | | | | ப் | | | | | | | | | | | | ஓம் | | | | | | | |



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 2

## துணைவினைகள்

### வினை வகைகள்

**தனிவினை**

**படி** – பகாப்பதம்
தனிவினையடி பிரிக்கமுடியாது

தனிவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்கள் தனிவினை

**கூட்டுவினை**

**முன்னேறினோம்** – பகுபதம்
கூட்டுவினையடி பிரிக்கமுடியும்

கூட்டுவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைக் கூட்டுவினை

### கூட்டுவினை

மூன்று வகைப்படும்

**1. பெயர்+வினை=வினை**

ஆணை+இடு=ஆணையிடு
கேள்வி+படு=கேள்விப்படு

**2. வினை+வினை=வினை**

கண்டு+பிடி=கண்டுபிடி
சொல்லி+கொடு=சொல்லிக்கொடு

**3. இடை+வினை=வினை**

முன்+ஏறு=முன்னேறு
பின்+பற்று=பின்பற்று



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

**ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)**

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### கூட்டுவினையில் வரும்

#### முதல்வினை

படம் **பார்**த்தேன்

**பார்** – கண்களால் பார்த்தல்

கூட்டுவினையின் முதல் உறுப்பாக வந்து, தன், அடிப்படைப் பொருளைத் தரும் வினை **முதல் வினை**

முதல்வினை
**செய** (அல்லது) **செய்து**
வினையெச்ச வடிவில் இருக்கும்

#### துணைவினை

எழுதிப் **பார்**த்தாள்

**பார்** – சோதித்துஅறிதல்

கூட்டுவினையின் இரண்டாவது உறுப்பாக வந்து, தன் அடிப்படைப் பொருளை விட்டுவிட்டு முதல்வினைக்குத்துணையாக வேறுபொருளைத் தரும்வினை, **துணைவினை**

1. வினையடி வடிவில் இருக்கும்
2. திணை, பால், இடம், காலம் காட்டும்
3. விகுதிகளைப் பெறும்
4. தமிழில் 40 துணைவினைகள் உள்ளன
5. துணைவினைகள் பெரும்பாலானவை முதல் வினையாகும்




இயல் - 2-2

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்




**துணைவினைகள் - பண்புகள்**

1. துணைவினைகள் பேசுவோரின் மனநிலை மற்றும் செயலின் தன்மைகளைப் புலப்படுத்துகிறது.
2. முதல் வினையைச் சார்ந்து, வினைப்பொருண்மைக்கு மெருக்கூட்டுகின்றது.
3. பேச்சுமொழியில் துணைவினைகள் அதிகமாக உள்ளன.

இயல் - 2-3

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 3

## வல்லினம் மிகும் இடங்களும் (க், ச், த், ப்), மிகா இடங்களும்

| வ. எண் | வல்லினம் க், ச், த், ப் மிகும் இடங்கள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 1. | **அந்த, இந்த** என்னும் சுட்டுத்திரிபுகளுக்குப் பின் வல்லினம் மிகும் | இந்தக் காலம்<br>அந்தப் பக்கம் |
| 2. | **எந்த** என்னும் வினாத்திரிபுபின் வல்லினம் மிகும் | எந்தப்பயணம்?<br>எந்தத்திசை? |
| 3. | **ஐ** - இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும் | பாடத்தைப் படி<br>கதவைத் திற |
| 4. | **கு** - நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும் | எனக்குத் தெரியும்<br>ஊருக்குச் செல் |
| 5. | **அகர (அ), இகர (இ)** ஈற்று வினையெச்சங்கள் பின் வல்லினம் மிகும் | ஆடச் சொன்னார்<br>ஓடிப் போனார் |
| 6. | **வன்தொடர்க் குற்றியலுகரம்** (கு, சு, டு, து, பு, று) பின் வல்லினம் மிகும் | பெற்றுக் கொண்டேன்<br>படித்துப் பார்த்தார் |
| 7. | **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்** பின் வல்லினம் மிகும் | செல்லாக் காசு<br>ஓடாக் குதிரை |
| 8. | **உவமைத்தொகை**யில் வல்லினம் மிகும் | தாய்த்தமிழ்<br>மலர்ப்பாதம் |
| 9. | **உருவ**கத்தில் வல்லினம் மிகும் | தாமிழ்த்தாய்<br>உலகப் பந்து |
| 10. | **எட்டு, பத்து - எண்ணுப்** பெயர்களின் பின் வல்லினம் மிகும் | எட்டுத்தொகை<br>பத்துப்பாட்டு |



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## வல்லினம் மிகும் இடங்களும் (க், ச், த், ப்), மிகா இடங்களும்

| வ. எண் | வல்லினம் க், ச், த், ப் மிகும் இடங்கள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 11. | **அப்படி, இப்படி, எப்படி** ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும் | அப்படிச் செய்<br>இப்படிக் காட்டு |
| 12. | **திசைப் பெயர்களின்** பின் வல்லினம் மிகும் | கிழக்குக் கடல்<br>தெற்குப் பக்கம் |
| 13. | **மகரமெய்** கெட்டு வல்லினம் மிகும் | மரம் + சட்டம்<br>மரச்சட்டம் |
| 14. | **இருபெயரெட்டு**ப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும் | மல்லிகைப்பூ<br>சித்திரைத்திங்கள் |
| 15. | **ஓரெழுத்து** ஒருமொழிக்குப் பின் வல்லினம் மிகும் | தைத்திங்கள்<br>பூப்பந்தல் |
| 16. | **என, ஆக** - சொல்லுருபுகளின் பின் வல்லினம் மிகும் | எனக்கேட்டார்<br>வருவதாகக்கூறு |
| 17. | **அதற்கு, இதற்கு, எதற்கு** - சொற்களின் பின் வல்லினம் மிகும் | அதற்குக்கொடு<br>எதற்குக்கேட்கிறாய்? |
| 18. | **இனி, தனி** சொற்களின் பின் வல்லினம் மிகும் | தனிச்சிறப்பு<br>இனிக்காண்போம் |
| 19. | **மிக** - சொல்லின் பின் வல்லினம் மிகும் | மிகப் பெரியவர் |
| 20. | **சால, தவ, தட, குழ** உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும் | சாலப் பேசினார்<br>தவச்சிறிது |

இயல் - 3-2

# இயல் - 4

## வல்லினம் மிகும் இடங்களும் (க், ச், த், ப்), மிகா இடங்களும்

| வ. எண் | வல்லினம் மிகா இடங்கள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 1. | **எழுவாய்த்(பெயர்) தொடர்**களில் வல்லினம் மிகாது | தம்பி படித்தான்<br>கிளிபேசும் |
| 2. | **அது**, **இது**, **எது**, சொற்களை அடுத்து வல்லினம் மிகாது | அது செய்<br>எது சென்றது? |
| 3. | **பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம்** பின் வல்லினம் மிகாது | எழுதியபாடல்<br>எழுதாத பாடல் |
| 4. | **இரண்டாம் வேற்றுமைத்தொகை**யில் வல்லினம் மிகாது | நாடு கண்டான்<br>காய் தின்றேன் |
| 5. | **மென்தொடர், இடைத்தொடர்க் குற்றியலுகரங்களில்** வல்லினம் மிகாது | தின்று தீர்த்தான்<br>செய்து பார்த்தான் |
| 6. | **வினைத்தொகை**யில் வல்லினம் மிகாது | எழுதுபொருள்<br>சுடுசோறு |
| 7. | **படி**வினையெச்சத்தில் வல்லினம் மிகாது | பாடும்படி கேட்டாள்<br>வரும்படி சொன்னார் |
| 8. | **விளித்தொடரில்** வல்லினம் மிகாது | மகனே படி |
| 9. | **வியங்கோள் வினைமுற்றுத்** தொடரில் வல்லினம் மிகாது | வாழ்க தமிழ்<br>வருக தலைவா! |
| 10. | **அன்று**, **இன்று**, **என்று** - சொற்களின் பின் வல்லினம் மிகாது | அன்று சொன்னார்<br>என்று தருவார்? |



**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### வல்லினம் மிகும் இடங்களும் (க், ச், த், ப்), மிகா இடங்களும்

| வ. எண் | வல்லினம் மிகா இடங்கள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 11. | **அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு** - சொற்களின் பின் வல்லினம் மிகாது | அவ்வளவு பெரியது? எவ்வளவு சிறியது? |
| 12. | **அத்தனை, இத்தனை, எத்தனை** - சொற்களின் பின் வல்லினம் மிகாது | இத்தனை சிறியது எத்தனை பெரியது? |
| 13. | எட்டு, பத்து தவிர **பிற எண்ணுப்பெயர்களு**டன் வல்லினம் மிகாது | ஒரு புத்தகம் மூன்று கோடி |
| 14. | **அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி**யில் வல்லினம் மிகாது | பார் பார் சல சல |
| 15. | **கள் விகுதி**சேரும் போதுவல்லினம் மிகாது | வாழ்த்துகள் |
| 16. | **உறு, நனி, கூர், கழி, கடி** உரிச்சொற்களில் வல்லினம் மிகாது | உறுபொருள் கடிகாவல் |
| 17. | **உம்மைத்தொகை**யில் வல்லினம் மிகாது | தாய் தந்தை |
| 18. | **மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைத்தொடர்**களில் வல்லினம் மிகாது | என்னோடு சேர் மரத்திலிருந்து பறி குரங்கினது குட்டி |
| 19. | **இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் வேற்றுமைத்தொகை**களில் வல்லினம் மிகாது | தமிழ் படி(ஐ) கைதட்டு (ஆல்) வீடு சென்றான் (கு) |
| 20. | **உயர்திணை பெயர்த்தொகை**யில் வல்லினம் மிகாது | தலைவன் கூற்று தலைவி கூற்று |

இயல் - 4-2

# இயல் - 5

## சொல்

- பெயர்ச்சொல்
- வினைச்சொல்
- இடைச்சொல்
- உரிச்சொல்

## இடைச்சொற்கள்

பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும் சார்ந்து இயங்கும் சொல்

- **வேற்றுமை உருபுகள்** – ஐ, ஆல், கு, இன், அது, கண்
- **பன்மை விகுதிகள்** – கள், மார்
- **திணை, பால் விகுதிகள்** – ஆன், ஆள், ஆர், ஏன், ஓம், ஆய், ஈர், அ, து
- **கால இடைநிலைகள்** – கிறு, கின்று
- **பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள்** – அ, இ, உ, மல்
- **எதிர்மறை இடைநிலைகள்** – ஆ, அல், இல்
- **தொழிற்பெயர் விகுதிகள்** – தல், அம், மை
- **வியங்கோள் விகுதிகள்** – க, இய
- **சாரியைகள்** – அத்து, அற்று, அம்
- **உவம உருபுகள்** – போல, மாதிரி
- **இணைப்பிடச் சொற்கள்** – உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும்



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இடைச்சொற்கள் வகைகள்

| தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் | சொல்லுருபுகள் | வினா உருபுகள் |
|---|---|---|
| உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் | மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை | ஆ, ஓ |

## உம்
## இடைச்சொல் வரும் பொருள்கள்

| | எடுத்துக்காட்டு |
|---|---|
| எதிர்மறை | மழைபெய்**தும்** புழுக்கம் குறையவில்லை |
| சிறப்பு | பாடகர்களும் போற்**றும்** பாடகர் |
| ஐயம் | பகலாக**வும்** இருக்கலாம் இரவாக**வும்** இருக்கலாம் |
| எச்சம் | தம்பி**யும்** வந்தான் |
| முற்று | எழுமை**யும்** ஏமாப்புடைத்து |
| அளவை | நில**மும்** நீ**ரும்** வா**னும்** தீ**யும்** காற்**றும்** |
| தெரிநிலை | செடி**யும்** அல்ல கொடி**யும்** அல்ல. இது என்ன? |
| ஆக்கம் | கழுதைப்பால் மருந்**தும்** ஆயிற்று |

இயல் - 5-2

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# ஓ
## இடைச்சொல் வரும் பொருள்கள்

| பொருள் | எடுத்துக்காட்டு |
|---|---|
| ஒழியிசை | படிக்க**வோ** வந்தாய் |
| வினா | படித்தா**யோ**? |
| சிறப்பு – உயர்வு | ஓ ஓ பெரியார் |
| சிறப்பு – இழிவு | ஓ ஓ கொடியன் |
| எதிர்மறை | தம்பி**யோ** அடித்தான் |
| தெரிநிலை | நல்லவ**னோ**? தீயவ**னோ**? |
| கழிவு (இரக்கம்) | விழுந்துவிட்டா**ரோ**? |
| பிரிநிலை | அவர்களுள் இவ**ளோ** நல்லவள் |
| அசைநிலை | காணியவம்மி**னோ** |
| ஐயம் | இன்றைக்கு மழை பொய்யு**மோ**? |
| மிகை | அவ**னோ** வீரன் |
| இது அல்லது அது | பூங்கொடி**யோ** மலர்க்கொடி**யோ** பேசுங்கள் |
| இதுவும் இல்லை அதுவும் இல்லை | வேலு**வோ**, கண்ண**னோ** பேசாதீர்கள் |

இயல் - 5-3

## ஏ
## இடைச்சொல் வரும் பொருள்கள்

எடுத்துக்காட்டு

| | |
|---|---|
| **பிரிநிலை** | அவர்களுள் இவ**ளே** நல்லவள் |
| **வினா** | நீ**யே** செய்தாய்? |
| **எண்** | நில**மே**, நீ**ரே**, வா**னே**, தீ**யே**, காற்**றே** |
| **ஈற்றசை** | பிறவி**யே** பெருங்கடலளவு |
| **தேற்றம் (தெளிவு)** | தன் நெஞ்**சே** தன்னைச் சுடும் |
| **இசைநிறை** | ஏ**யே**, இவள் ஒருத்தி பேடியோ |

## தான்
## இடைச்சொல் வரும் பொருள்கள்

அழுத்தம் மற்றும் சொல்லை முதன்மைப்படுத்துகின்றது

எடுத்துக்காட்டு

தூயவள் **தான்** நேற்று விழாவில் பாடினாள்
தூயவள் நேற்று**தான்** விழாவில் பாடினாள்
தூயவள் நேற்று விழாவில்**தான்** பாடினாள்
தூயவள் நேற்று விழாவில் பாடினாள்**தான்**

இயல் - 5-4

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## மட்டும்
இடைச்சொல் வரும் பொருள்கள்

எடுத்துக்காட்டு

- வரையறை → படிப்பு **மட்டும்** இருந்தால் போதும்
- முழுந்தவரை → முடியும் **மட்டும்** எழுது
- குறிப்பிட்ட நேரம் வரை → தேர்வுக்கு ஒரு மாதம் **மட்டும்** உள்ளது

## ஆவது
இடைச்சொல் வரும் பொருள்கள்

எடுத்துக்காட்டு

- குறைந்த அளவு → ஐந்து **பேராவது** வாருங்கள்
- இது அல்லது அது → அவ**னாவது**, இவ**னாவது** செய்து முடிக்க வேண்டும்
- வரிசைப்படுத்தல் → முதல**ாவது**, இரண்**டாவது**, மூன்**றாவது**

## கூட
இடைச்சொல் வரும் பொருள்கள்

எடுத்துக்காட்டு

- குறைந்தபட்சம் → என்னிடம் ஒரு காசு **கூட** இல்லை
- முற்றுப்பொருள் → தெருவில் ஒருவர் **கூட** நடமாடவில்லை
- எச்சம் தழுவிய கூற்று → அவனுக்கு வரையக்**கூட**த் தெரியும்

இயல் - 5-5

## ஆ
## இடைச்சொல் வரும் பொருள்கள்

எடுத்துக்காட்டு

- வினா ?
  - புகழேந்தி நேற்று உன்னுடன் பேசினா**னா**?
  - புகழேந்தி நேற்று உன்னுட**னா** பேசினான்?

## ஆம்
## இடைச்சொல் வரும் பொருள்கள்

எடுத்துக்காட்டு

- இசைவு → உள்ளே வர**லாம்**
- சாத்தியம் → உன்னாலே முடியும் செய்ய**லாம்**
- பொருத்தம் → அவ**னாம்** புலி போன்றான்
- தகவல் → இனியன் அரக்கோணம் போகிறா**னாம்**
- வதந்தி (பொய்மொழி) → பறக்கும் தட்டு நேற்றுப் பறந்த**தாம்**

ஒருமை : **அன்று**
பன்மை : **அல்ல**
→ இது பழம் **அன்று**
இவை பழங்கள் **அல்ல**

எண்ணிக்கை : **எத்தனை**
அளவு / காலம் : **எத்துணை**
→ **எத்தனை** – எத்தனை நூல்கள் வேண்டும்?
**எத்துணை** பெரிய மரம்?

இயல் – 5-6

## உரிச்சொற்கள்

பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் முன்னால் வந்து பொருள் தரும் **இசை**, **குறிப்பு**, **பண்பு** பொருள்களில் வரும்

## உரிச்சொற்கள்

### ஒரு சொல் பலபொருள் = கடி

**கடி** மலர் – **மணம்** மிக்கமலர்
**கடி** நகர் – **காவல்** மிக்கநகர்
**கடி** விடுதும் – **விரைவாக** விடுவோம்
**கடி** நுனி – **கூர்மையான** நுனி

### பல சொல் ஒரு பொருள்
### உறு, தவ, நனி, கழி
### பொருள் மிகுதி, மிக

**உறு**பசி – **மிகுதி**யானபசி
**தவ**ச்சிறிது – **மிக**ச்சிறிது
**நனி**நன்று – **மிக**நன்று
**கழி**பேருவகை – **மிகுதி**யான பேரின்பம்

### பெயர் - வினை = உரிச்சொற்கள்

**மழ** – மழலை
**குழ** – குழந்தை
**பயப்பு** – பயன்
**உவப்பு** – உவகை
**செழுமை** – செழிப்பு, செழித்த, செழிக்கும்
**விழுமம்** – விழுப்பம், விழுமுதல், விழுமிய



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்




இயல் - 5-8

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்




இயல் - 5-9

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### மட்டும் இடைச்சொல் பொருள்கள்

- வரையறை
- முடிந்தவரை
- குறிப்பிட்ட நேரம் வரை

### ஆவது இடைச்சொல் பொருள்கள்

- குறைந்த அளவு
- இது அல்லது அது
- வரிசைப்படுத்தல்

### கூட இடைச்சொல் பொருள்கள்

- குறைந்தபட்சம்
- முற்றுப்பொருள்
- எச்சம் தழுவிய கூற்று

### ஆம் இடைச்சொல் பொருள்கள்

- இசைவு
- சாத்தியம்
- பொருத்தம்
- தகவல்
- வதந்தி (பொய்மொழி)

இயல் - 5-10

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்




இயல் - 5-11


**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 6

## புணர்ச்சி

நிலைமொழியும் வருமொழியும் சேர்வது புணர்ச்சி

### எழுத்து வகையால் சொற்கள் நான்கு வகைப்படும்

**நிலைமொழி**

- கலை+அழகு — ல்+ஐ உயிரீறு
- மண்+இடம் — மெய்யீறு

**வருமொழி**

- வாழை+இலை — உயிர்முதல்
- வாழை+மரம் — ம்+அ மெய்முதல்

## புணர்ச்சி இன்னதென்பது

மெய்யுயிர் முதலீ றாம்இரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

நன்னூல் : கருக



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### **எழுத்து வகையால் சொற்கள்** (நான்கு வகைப்படும்)

மணி + அடி
ண்+**இ** + **அ**
உயிர் + உயிர்
உயிர் முன் உயிர்

பனி + காற்று
ன் **இ** + **க்** ஆ
உயிர் + மெய்
உயிர் முன் மெய்

ஆல் + இலை
**ல்** + **இ**
மெய் + உயிர்
மெய் முன் உயிர்

மரம் + கிளை
ம் + க்+இ
மெய் + மெய்
மெய் முன் மெய்

### **புணர்ச்சி** (இரு வகைப்படும்)

**இயல்பு புணர்ச்சி**
சேரும்போது மாற்றமில்லை

வாழை + மரம்
வாழைமரம்
ஆல் + இலை
ஆலிலை

**விகாரப் புணர்ச்சி**
சேரும்போது மாற்றமுண்டு

1. நுழைவு + தேர்வு
   நுழைவுத்தேர்வு – த் **தோன்றல்**
2. பல் + பசை
   பற்பசை – ல்–ற் ஆகத்**திரிதல்**
3. புறம் + நானூறு
   புறநானூறு – ம் **கெடுதல்**

இயல் - 6-2

# உடம்படுமெய்ப் புணர்ச்சி ( ய்,வ் )

## இ, ஈ, ஐ முன் உயிர்வரின் ய் - என்ற உடம்படுமெய் தோன்றும்

மணி + அழகு

ண் இ + அ

இ முன் உயிர்-ய் தோன்றும்

மணி | +ய்+அ | ழகு

ய

மணியழகு

தீ + எரி

த் + ஈ + எ

ஈ முன் உயிர் ய் தோன்றும்

தீ | +ய்+எ | ரி

தீ**யெ**ரி

பனை +ஓலை

ன் + ஐ + ஓ

ஐ முன்உயிர் -ய் தோன்றும்

பனை | +ய்+ஓ | லை

**யோ**

பனை**யோ**லை

## அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ முன் உயிர்வரின் வ் என்ற உடம்படுமெய் தோன்றும்

பல + உயிர்

ல் + அ +உ

அ முன் உயிர்-வ் தோன்றும்

பல | +வ்+உ | யிர்

**வு**

பலவுயிர்

பா + இனம்

ப் + ஆ + இ

ஆ முன் உயிர் வ் தோன்றும்

பா | +வ்+இ | னம்

பா**வி**னம்

பூ + அரசி

ப் + ஊ + அ

ஊ முன் உயிர் வ் தோன்றும்

பூ | +வ்+அ | ரசி

**வ**

பூ**வ**ரசி

கோ அரசன்

க் + ஓ+ அ

ஓ முன் உயிர் -வ் தோன்றும்

கோ | +வ்+அ | ரசன்

கோ**வ**ரசன்

## ஏ முன் உயிர்வரின் ய், வ் - உடம்படுமெய்கள் தோன்றும்

இவனே + அவன்

ன் + ஏ+ அ

ஏ முன் உயிர்-ய் தோன்றும்

இவனே | +ய்+அ | வன்

இவனே**ய**வன்

சே +அடி

ச் + ஏ + அ

ஏ முன் உயிர்-ய் தோன்றும்

சே | +ய்+அ | டி

சே**ய**டி

சே +அடி

ய் + ஏ + அ

ஏ முன் உயிர்-வ் தோன்றும்

சே | +வ்+அ | டி

**வ**

சே**வ**டி

இயல் - 6-3

## குற்றியலுகரப் புணர்ச்சி

| கு | சு | டு | து | பு | று |
|---|---|---|---|---|---|
| க் + உ | ச் + உ | ட் + உ | த் + உ | ப் + உ | ற் + உ |

### குற்றியலுகரம் ( கு, சு, டு, து, பு, று )

குற்றியலுகரம் உயிர் முன் உகரம் கெட்டு, மெய் வருமொழி உயிருடன் சேரும். முற்றியலுகரத்துக்கும் இவ்வாறே வரும்.

காற்று + ஓட்டம்
ற் + உ + ஓ
உயிர்முன் உ கெட்டு (காற்ற்)
காற்ற் + ஓட்டம்
உயிருடன் மெய் சேரும்
காற் ற்+ஓ ட்டம்
காற்**றோ**ட்டம்

சுக்கு + எடு
க் + உ + எ
உயிர் முன் உ கெட்டு (சுக்க்)
சுக்க் + எடு
உயிருடன் மெய் சேரும் (க்+எ+கெ)
சுக் க்+எ டு
சுக்**கெ**டு

உறவு + உண்டு
வ் + உ + உ
உயிர்முன் உ கெட்டு (உறவ்)
உறவ் + உண்டு
உயிருடன் மெய் சேரும்
உற வ்+உ ண்டு
உற**வு**ண்டு

மாசு + அறு
ச் + உ + அ
உயிர் முன் உ கெட்டு (மாச்)
மாச் + அறு
உயிருடன் மெய் சேரும் (ச்+அ=ச)
மா ச்+அ று
மா**ச**று



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 7

## ஆகுபெயர்

ஒன்றின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குத் தொன்று தொட்டு வருவது ஆகுபெயர்

### பொருள் முதல் ஆறோடு

- **பொருளாகுபெயர்** — முல்லையைத் தொடுத்தாள் **கொடி**யின் பெயர் **பூ**வுக்கு ஆகியது
- **இடவாகுபெயர்** — வகுப்பறை சிரித்தது **இட**த்தின் பெயர் **மாணவர்**களுக்கு ஆகியது
- **காலவாகுபெயர்** — கார் அறுத்தான் **கால**த்தின் பெயர் **பயிரு**க்கு ஆகியது
- **சினையாகுபெயர்** — மருக்கொழுந்து நட்டான் **உறுப்பி**ன் பெயர் **செடி**க்கு ஆகியது
- **பண்பாகுபெயர்** — மஞ்சள் பூசினாள் **நிற**ப்பண்பு **கிழங்கு**க்கு ஆகியது
- **தொழிலாகுபெயர்** — வற்றல் தின்றான் **தொழிற்**பெயர் **உணவு**ப்பொருளுக்கு ஆகியது



**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### அளவை ஆகுபெயர் (நான்கு வகைப்படும்)

| எண்ணலளவை ஆகுபெயர் | எடுத்தலளவை ஆகுபெயர் | முகத்தலளவை ஆகுபெயர் | நீட்டலளவை ஆகுபெயர் |
|---|---|---|---|
| எ.கா : ஒன்று பெற்றால் ஒளிமயம் | எ.கா : இரண்டு கிலோ கொடு | எ.கா : அரை லிட்டர் வாங்கு | எ.கா : ஐந்து மீட்டர் வெட்டினான் |
| **எண்**ணுப்பெயர் **குழந்தை**க்கு ஆகியது | **எடுத்தல**ளவை **பொருளு**க்கு ஆகியது | **முகத்தல**ளவை **பொருளு**க்கு ஆகியது | **நீட்டலள**வை **பொருளு**க்கு ஆகியது |

### ஆகுபெயர்

| | | |
|---|---|---|
| சொல்லாகுபெயர் | சொல்லைக்கேள் | சொல்லின் பெயர் அறிவுரை ஆகியது |
| தானியாகுபெயர் | விளக்கு ஒடிந்தது | ஒளியின் பெயர் தண்டுக்கு ஆகியது |
| கருவியாகுபெயர் | வானொலி கேட்டேன் | கருவி பெயர் நிகழ்ச்சிக்கு ஆகியது |
| காரியவாகுபெயர் | பைங்கூழ் வளர்ந்தது | காரியப்பெயர் பயிருக்கு ஆகியது |
| கருத்தாவாகுபெயர் | வள்ளுவர் படித்தேன் | திருவள்ளுவர் அவர் எழுதிய நூலுக்கு ஆகியது |
| உவமையாகுபெயர் | காளைவந்தான் | காளை பெயர் வலிமையுடைய வீரனுக்கு ஆகிறது |

இயல் - 7-2

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# ஆகுபெயர் (பதினாறு வகைப்படும்)

## பொருள் முதல் ஆறோடு

- பொருளாகுபெயர்
- இடவாகுபெயர்
- காலவாகுபெயர்
- சினையாகுபெயர்
- பண்பாகுபெயர்
- தொழிலாகுபெயர்

## அளவை ஆகுபெயர் நான்கு வகை

- எண்ணலளவை ஆகுபெயர்
- எடுத்தலளவை ஆகுபெயர்
- முகத்தலளவை ஆகுபெயர்
- நீட்டலளவை ஆகுபெயர்

## பிற ஆகுபெயர்கள்

- சொல்லாகுபெயர்
- தானியாகுபெயர்
- கருவியாகுபெயர்
- காரியவாகுபெயர்
- கருத்தாவாகுபெயர்
- உவமையாகுபெயர்

இயல் - 7-3

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 8

## யாப்பிலக்கணம்

**யாப்பு வேறு பெயர்கள்**

**செய்யுள், தூக்கு, தொடர்பு, பனுவல், கவி, கவிதை, பா, பண், பாட்டு**






செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### எழுத்து (247)

| குறில் (95) மாத்திரை - 1 | | நெடில் (133) மாத்திரை - 2 | | ஒற்று (19) மாத்திரை - ½ | |
|---|---|---|---|---|---|
| உயிர்க்குறில் | உயிர்மெய்க் குறில் | உயிர்நெடில் | உயிர்மெய் நெடில் | மெய் | ஆய்தம் |
| 5 | 90 | 7 | 126 | 18 | 1 |

### அசை

எழுத்தால் ஆனது

அசை இரு வகைப்படும்

| நேரசை எழுத்துகள் | |
|---|---|
| 1. தனிக்குறில் | ப |
| 2. தனிக்குறில் ஒற்று | பல் |
| 3. தனிநெடில் | பா |
| 4. தனிநெடில் ஒற்று | பால் |

| நிரையசை எழுத்துகள் | |
|---|---|
| 1. இருகுறில் | அணி |
| 2. இருகுறில் ஒற்று | அணில் |
| 3. குறில், நெடில் | கலா |
| 4. குறில் நெடில் ஒற்று | கலாம் |

### சீர்

அசைகள் சேர்க்கை

சீர் நான்கு வகைப்படும்

- ஓரசைச்சீர்
- ஈரசைச்சீர்
- மூவசைச்சீர்
- நாலசைச்சீர்

இயல் - 8-2

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஓரசைச்சீர் (நான்கு)

| நேர் | நிரை | நேர்பு | நிரைபு |
|---|---|---|---|
| நாள் | மலர் | காசு | பிறப்பு |

## ஈரசைச்சீர் (நான்கு)

| அசை | வாய்பாடு | சீர் | |
|---|---|---|---|
| நேர் நேர் | தே**மா** | **மாச்சீர்** | ஆசிரிய உரிச்சீர் |
| நிரை நேர் | புளி**மா** | | |
| நிரை நிரை | கரு**விளம்** | **விளச்சீர்** | |
| நேர் நிரை | கூ**விளம்** | | |

## மூவசைச்சீர் (எட்டு)

**காய்ச்சீர்** (வெண்சீர்)

| அசை | | | | வாய்பாடு |
|---|---|---|---|---|
| 1. | நேர் | நேர் | நேர் | தேமாங்காய் |
| 2. | நிரை | நேர் | நேர் | புளிமாங்காய் |
| 3. | நிரை | நிரை | நேர் | கருவிளங்காய் |
| 4. | நேர் | நிரை | நேர் | கூவிளங்காய் |

**கனிச்சீர்** (வஞ்சி உரிச்சீர்)

| அசை | | | | வாய்பாடு |
|---|---|---|---|---|
| 1. | நேர் | நேர் | நிரை | தேமாங்கனி |
| 2. | நிரை | நேர் | நிரை | புளிமாங்கனி |
| 3. | நிரை | நிரை | நிரை | கருவிளங்கனி |
| 4. | நேர் | நிரை | நிரை | கூவிளங்கனி |



**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### அலகிட்டு வாய்பாடு கூறுதல்

**அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | அன் \| புநாண் | நேர் நிரை | கூவிளம் |
| 2 | ஒப் \| புர \| வு | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| 3 | கண் \| ணோட் \| டம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 4 | வாய் \| மை \| யொ(டு) | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 5 | ஐந் \| துசால் \| பு | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| 6 | ஊன் \| றிய | நேர் நிரை | கூவிளம் |
| 7 | தூண் | நேர் | **நாள்** |

இக்குறட்பா **நாள்** எனும் வாய்பாட்டில் முடிந்தது

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | சுழன் \| றும் \| ஏர்ப் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 2 | பின் \| னது | நேர் நிரை | கூவிளம் |
| 3 | உல \| கம் | நிரை நேர் | புளிமா |
| 4 | அத \| னால் | நிரை நேர் | புளிமா |
| 5 | உழந் \| தும் | நிரை நேர் | புளிமா |
| 6 | உழ \| வே | நிரை நேர் | புளிமா |
| 7 | தலை | நிரை | **மலர்** |

இக்குறட்பா **மலர்** எனும் வாய்பாட்டில் முடிந்தது

இயல் - 8-4

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அலகிட்டு வாய்பாடு கூறுதல்

**காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | கா \| ணா \| தான் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 2 | காட் \| டுவான் | நேர் நிரை | கூவிளம் |
| 3 | தான் \| கா \| ணான் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 4 | கா \| ணா \| தான் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 5 | கண் \| டா \| னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 6 | தான் \| கண் \| ட | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 7 | வாறு | நேர்பு | **காசு** |

இக்குறட்பா **காசு** எனும் வாய்பாட்டில் முடிந்தது

**உழுவார் உலகத்தார்க் காணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து**

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | உழு \| வார் | நிரை நேர் | புளிமா |
| 2 | உல \| கத் \| தார்க் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 3 | கா \| ணிஅஃ | நேர் நிரை | கூவிளம் |
| 4 | தாற் \| றா \| து | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 5 | எழு \| வா \| ரை | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 6 | எல் \| லாம் | நேர் நேர் | தேமா |
| 7 | பொறுத்து | நிரைபு | **பிறப்பு** |

இக்குறட்பா **பிறப்பு** எனும் வாய்பாட்டில் முடிந்தது

இயல் - 8-5

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

### தளை

ஈற்று அசையும் வரும் அசையும் ஒன்றியும் ஒன்றாமலும் வருவது தளை

### தளை (ஏழு வகைப்படும்)

| தளை வகை | சீர்கள் | விதி |
|---|---|---|
| 1. நேரொன்றாசிரியத்தளை | தேமா, புளிமா | மா முன் நேர் |
| 2. நிரையொன்றாசிரியத்தளை | கருவிளம், கூவிளம் | விளம் முன் நிரை |
| 3. இயற்சீர்வெண்டளை | தேமா, புளிமா | மா முன் நிரை |
| | கருவிளம், கூவிளம் | விளம் முன் நேர் |
| 4. வெண்சீர்வெண்டளை | தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் | காய் முன் நேர் |
| 5. கலித்தளை | தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் | காய் முன் நிரை |
| 6. ஒன்றிய வஞ்சித்தளை | தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி | கனி முன் நிரை |
| 7. ஒன்றா வஞ்சித்தளை | தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி | கனி முன் நேர் |

இயல் - 8-6

**செ.பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

## தளை வகைகள் விளக்கம்

| வ.எ | எடுத்துக்காட்டுகள் | விளக்கம் | தளை வகைகள் |
|---|---|---|---|
| 1 | மல் லல் மூ தூர்<br>நேர் நேர் நேர்<br>தேமா முன் | மா முன் நேர்<br>↓<br>(நேர்) | நேரொன்றாசிரியத்தளை |
| 2 | பிடி பசி களைஇ ய<br>நிரை நிரை நிரை<br>கருவிளம் முன் | விளம் முன் நிரை<br>↓<br>(நிரை) | நிரையொன்றாசிரியத்தளை |
| 3 | தகு தியான் வென் று விடல்<br>நிரை நிரை நேர் நேர் நிரை<br>கருவிளம் முன் தேமா முன் | விளம் முன் நேர்<br>மா முன் நிரை | இயற்சீர்வெண்டளை |
| 4 | செல் வத் துள் செல் வம்<br>நேர் நேர் நேர் நேர்<br>தேமாங்காய் முன் | காய் முன் நேர் | வெண்சீர்வெண்டளை |
| 5 | நெறி மருப் பு எரு மையின்<br>நிரை நிரை நேர் நிரை<br>கருவிளங்காய் முன் | காய் முன் நிரை | கலித்தளை |
| 6 | தே மாங் கனி சித றி<br>நேர் நேர் நிரை நிரை<br>தேமாங்கனி முன் | கனி முன் நிரை | ஒன்றிய வஞ்சித்தளை |
| 7 | ஏ மாங் கதம் என் று<br>நேர் நேர் நிரை நேர்<br>தேமாங்கனி முன் | கனி முன் நேர் | ஒன்றா வஞ்சித்தளை |

இயல் - 8-7

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அடி

இரண்டு சீர்கள், இரண்டு சீர்களுக்கு மேல் வருவது அடி ஆகும்

## அடி (ஐந்து வகைப்படும்)

| | |
|---|---|
| 1. குறளடி | அடிதோறும் **இரண்டு** சீர்கள் |
| 2. சிந்தடி | அடிதோறும் **மூன்று** சீர்கள் |
| 3. அளவடி (அல்லது) நேரடி | அடிதோறும் **நான்கு** சீர்கள் |
| 4. நெடிலடி | அடிதோறும் **ஐந்து** சீர்கள் |
| 5. கழிநெடிலடி | **ஆறு சீர்கள்** அதற்கு மேற்பட்ட சீர்கள் |

## அடி

**குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி** நாலொருசீர்
அறைதரு காலை அளவொரு **நேரடி** ஐயொருசீர்
நிறைதரு பாத **நெடிலடி** யாநெடு மேன்பணைத்தோள்
கறைகெழு வேற்கண லாய்மிக்க பாதங் **கழிநெடிலே**

**யாப்பருங்கலக்காரிகை : கஉ**

இயல் - 8-8

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## ஒன்பதாம் வகுப்பு (2019 - 2020)

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான இலக்கண வரைபடங்கள்

## அடி வகைகள் விளக்கம்

| வ.எண் | எடுத்துக்காட்டுகள் | விளக்கம் | அடிவகைகள் |
|---|---|---|---|
| 1 | நண்பா நலமா?<br>நன்றாக படி<br>வெற்றி பெறுவாய்! | அடிதோறும்<br>**இரண்டு சீர்கள்**<br>உள்ளன | **குறளடி** |
| 2 | அம்மா அம்மா வணக்கம்<br>அன்பு வேண்டும் எனக்கும்<br>ஐயா ஐயா வணக்கம்<br>அறிவு வேண்டும் எனக்கும் | அடிதோறும்<br>**மூன்று சீர்கள்**<br>உள்ளன | **சிந்தடி** |
| 3 | படிப்பிலே பண்பும் பணிவிலே அன்பும்<br>எடுப்பாக கொண்டவர் எம்பள்ளி மாணவர் | அடிதோறும்<br>**நான்கு சீர்கள்**<br>உள்ளன | **அளவடி**<br>(அல்லது)<br>**நேரடி** |
| 4 | அடிசில் வைகல் ஆயிரம் அறப்புறமும் ஆயிரம்<br>கொடியனார் செய்கோலமும் வைகல் தோறும் ஆயிரம் | அடிதோறும்<br>**ஐந்து சீர்கள்**<br>உள்ளன | **நெடிலடி** |
| 5 | கல்வி இல்லாத பெண்கள்<br>களர்நிலம் அந்தி லத்தில்<br>புல்விளைந் திடலாம் நல்ல<br>புதல்வர்கள் விளைதல் இல்லை | அடிதோறும்<br>**ஆறு சீர்கள்**<br>உள்ளன | **கழிநெடிலடி** |

இயல் - 8-9

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# தொடை (தொடுத்தல்)

செய்யுளின் **அடிகள், சீர்கள், எழுத்துகள்** ஒன்றிவரத் தொடுப்பது **தொடை**

## தொடை (எட்டு வகைப்படும்)

1. மோனைத்தொடை
2. எதுகைத்தொடை
3. இயைபுத்தொடை
4. முரண்தொடை
5. அளபெடைத்தொடை
6. அந்தாதித்தொடை
7. இரட்டைத்தொடை
8. செந்தொடை

இயல் - 8-10

# மோனைத்தொடை

**முதல் எழுத்து** ஒன்றி வருவது

எ.கா : **செ**ல்வத்துள் **செ**ல்வம் **செ**விச்செல்வம் அச்செல்வம்
**செ**ல்வத்துள் எல்லாம் தலை

## மோனை விளக்கம்

1 ) **செ**ல்வத்துள் **செ**ல்வம் **செ**விச்செல்வம்
சீர்தோறும் முதல் எழுத்து **செ** ஒன்றி வருவதால் **சீர்மோனைத்தொடை**

2 ) **செ**ல்வத்துள்.......
**செ**ல்வத்துள்.......
அடிதோறும் முதல் எழுத்து **செ** ஒன்றி வருவதால் **அடிமோனைத்தொடை**

# எதுகைத்தொடை

இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது

எ.கா : இ**ன்**மையுள் இ**ன்**மை விருந்தொரால் வ**ன்**மையுள்
வ**ன்**மை மடவார்ப் பொறை

## எதுகை விளக்கம்

1 ) இ**ன்**மையுள் இ**ன்**மை
சீர் தோறும் இரண்டாம் எழுத்து **ன்** ஒன்றி வருவதால் **சீர்எதுகைத்தொடை**

2 ) இ**ன்**மையுள்.......
வ**ன்**மை.......
அடிதோறும் இரண்டாம் எழுத்து **ன்** ஒன்றி வருவதால் **அடிஎதுகைத்தொடை**

இயல் - 8-11

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## இயைபுத்தொடை

இறுதி எழுத்து ஒன்றி வருவது

எ.கா : ஒன்றறி வது**வே** உற்றறி வது**வே**
இரண்டறி வது**வே** அதனொடு நா**வே**

### இயைபு விளக்கம்

1) ஒன்றறி வது**வே** உற்றறி வது**வே**
சீர்தோறும் இறுதி எழுத்து **வே** ஒன்றி வருவது **சீர்இயைபுத்தொடை**

2) .......உற்றறி வது**வே**
.......அதனொடு நா**வே**
அடிதோறும் இறுதி எழுத்து **வே** ஒன்றி வருவது **அடிஇயைபுத்தொடை**

## தொடை

எழுவா யெழுத்தொன்றின் மோனை இறுதி இயைபிரண்டாம்
வழுவா எழுத்தொன்றின் மாதே எதுகை மறுதலைத்த
மொழியான் வரினு முரண்டி தோறு முதன்மொழிக்கண்
அழியா தளபெடுத் தொன்றுவ தாகும் அளபெடையே

யாப்பருங்கலக்காரிகை : கசு



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இயல் - 9

## அணி (அழகு)

செய்யுளில் சொல்லையும், பொருளையும், கருத்தையும் அழகுபடுத்துவது அணி

**உவமையணி :** செய்யுளில் **உவமானம்,** (உவமை) **உவமேயம்** (பொருள்) **உவமஉருபு** ஆகிய மூன்றும் வருவது **உவமையணி** ஆகும்.

**எ.கா : மலர் போன்ற பாதம்**

இதில் **மலர்** - உவமானம். **பாதம்** - உவமேயம். **போன்ற** - உவமஉருபு. எனவே, இது **உவமையணி** ஆகும்.

1\.

உவமேயம்
இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந்து — உவமானம்
அற்று — உவமஉருபு

இக்குறட்பாவில் **கனியிருப்பக் காய்கவர்ந்து** என்பது உவமானம் **இனிய உளவாக இன்னாத கூறல்** என்பது **உவமேயம். அற்று** என்ற **உவமஉருபு.** எனவே, இது **உவமையணி** ஆகும்.

2\.

உவமானம் — அகழ்வாரைத் தாங்கும் நிலம்
உவமஉருபு — போலத்
தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை
உவமேயம்

இக்குறட்பாவில் **அகழ்வாரைத் தாங்கும் நிலம்** என்பது **உவமானம். தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை** என்பது **உவமேயம். போல** என்ற **உவமஉருபு.** எனவே, இது **உவமையணி** ஆகும்.

3.

| | | |
|---|---|---|
| உவமேயம் | | |
| சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் | | பசுமண் |
| கலத்துநீர் பெய்திரீஇ | அற்று | |
| உவமானம் | உவமஉருபு | |

இக்குறட்பாவில் **பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ** என்பது உவமானம் **சலத்தால் பொருள்செய்தே மார்த்தல்** என்பது **உவமேயம்.** **அற்று** என்பது **உவமஉருபு.** எனவே, இது **உவமையணி** ஆகும்.

## சொற்பொருள் பின்வருநிலையணி

செய்யுளில் **சொல்லும் பொருளும் பல இடங்களிலும் வருவது** சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

4. **எ.கா :** எல்லா **விளக்கும் விளக்கல்ல** சான்றோர்க்குப்
பொய்யா **விளக்கே விளக்கு.**

இக்குறட்பாவில் **விளக்கு** என்ற சொல் **விளக்கு** என்ற ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளதால், இது **சொற்பொருள் பின்வருநிலையணி.**

5. **செல்வத்**துள் **செல்வம்** செவிச்**செல்வம்** அச்**செல்வம்**
**செல்வத்**துள் எல்லாம் தலை

இக்குறட்பாவில் **செல்வம்** என்ற சொல் **செல்வம்** என்ற பொருளில் பலமுறை வந்துள்ளதால் இது **சொற்பொருள் பின்வருநிலை அணி** ஆகும்.

6. குணம்**நாடிக்** குற்றமும் **நாடி** அவற்றுள்
மிகை**நாடி** மிக்க கொளல்

இக்குறட்பாவில் **நாடி** என்ற சொல் **ஆராய்ந்து** என்ற பொருளில் பலமுறை வந்துள்ளதால் இது **சொற்பொருள் பின்வருநிலை** அணி

இயல் - 9-2

7. எ.கா : **தீய**வை **தீய** பயத்தலால் **தீய**வை
**தீ**யினும் அஞ்சப் படும்.

இக்குறட்பாவில் **தீய** என்ற சொல் **தீமை** என்றபொருளில் பலமுறை வந்துள்ளதால், இது **சொற்பொருள் பின்வருநிலை அணி** ஆகும்.

**ஏக தேச உருவக அணி**

↓ ஒரு ↓ பகுதி

செய்யுளில் **ஒரு பகுதியை உருவகம் செய்து, மற்றொரு பகுதியை உருவகம்** செய்யாமல் கூறுவது **ஏகதேச உருவக அணி** ஆகும்.

8. எ.கா : பெருமைக்கு ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

இக்குறட்பாவில் **செயல்களை உரைகல்** என்று உருவகப்படுத்தி **பெருமை எது?, சிறுமை எது?** என்று உருவகப்படுத்தவில்லை. எனவே, இது **ஏகதேச உருவக அணி**

9. எ.கா : அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்

இக்குறட்பாவில் **அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை** ஐந்தும் **தூண்கள்** என்று உருவகப்படுத்தி, **சால்பு யாது?** என்று உருவகப்படுத்தவில்லை. எனவே, இது **ஏகதேச உருவக அணி.**

10. எ.கா : ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

இக்குறட்பாவில் **சான்றாண்மை - கடல்** என்று உருவகப்படுத்தி, **சான்றோர்களை - கடற்கரையாக** உருவகப்படுத்தவில்லை. எனவே, இது **ஏகதேச உருவக அணி.**

இயல் - 9-3

11. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

இக்குறட்பாவில் **உழவர்கள் - அச்சாணி** என்று உருவகப்படுத்தி **உலகமக்களைத் தேர்** என உருவகப்படுத்தவில்லை எனவே, இது **ஏகதேச உருவக அணி.**

## உருவக அணி

**உவமை, உவமேயம்** இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது **உருவக அணி** ஆகும்.

12. இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

இப்பாடலில் **இன்சொல் - நிலமாகவும், வன்சொல் - களையாகவும், வாய்மை - எருவாகவும், அன்பு - நீராகவும், அறம் - கதிராகவும்** உருவகமாக வந்துள்ளன. எனவே, இது **உருவக அணி.**

**பின்வருநிலை அணிகள்**
மூன்று வகைப்படும்

| **சொல் பின்வருநிலை அணி** | **பொருள் பின்வருநிலை அணி** | **சொற்பொருள் பின்வருநிலை அணி** |
|---|---|---|
| ஒரு சொல் பல இடத்தில் வந்து, பல பொருள்கள் தருவது | பல சொற்கள் வந்து, ஒரே பொருளைத் தருவது | ஒரு சொல் பலமுறை வந்து, ஒரே பொருளைத் தருவது |

இயல் - 9-4

## சொல் பின்வருநிலை அணி

13. எ.கா : துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

இக்குறட்பாவில் **துப்பு** என்ற சொல் பல இடத்தில் வந்து **உண்பவர்**, **நன்மை**, **உணவு** என்ற பல பொருள்களைத் தருவதால், **சொல் பின்வருநிலை அணி.**

## பொருள் பின்வருநிலை அணி

14. எ.கா : அவிந்தன தோன்றி யலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை - மகிழந்திகழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை.

இப்பாடலில் **அவிழ்ந்தன**, **அலர்ந்தன**, **நெகிழ்ந்தன**, **விண்டன**, **விரிந்தன** **கொண்டன** என்ற பலசொற்கள் வந்து, **மலர்ந்தன** என்ற ஒரே பொருளைத் தருகிறது. எனவே, இது **பொருள்பின் வருநிலை அணி.**

## வஞ்சப் புகழ்ச்சியணி

**புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் வஞ்சப் புகழ்ச்சியணி** ஆகும்.

15. எ.கா : தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

இக்குறட்பாவில் **கயவர்-தேவர் போல்வர்** எனப் **புகழ்வது போலப் பழிப்பதும்**, **தேவர் - கயவர் போல்வர்** என **இகழ்வது போல் புகழ்வதும்** இது **வஞ்சப் புகழ்ச்சியணி** ஆகும்.



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## இயல் - 1

### சார்பெழுத்து

பத்து வகைப்படும்

1. உயிர்மெய்

2. ஆய்தம்

3. உயிரளபெடை

4. ஒற்றளபெடை

5. குற்றியலிகரம்

5. குற்றியலுகரம்

7. ஐகாரக்குறுக்கம்

8. ஔகாரக்குறுக்கும்

9. மகரக்குறுக்கம்

10. ஆய்தக்குறுக்கம்



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## அளபெடை

இரு வகைப்படும்

### 1. உயிரளபெடை

ஓஒதல்

### 2. ஒற்றளபெடை

இலங்ங்கு

## உயிரளபெடை

மூன்று வகைப்படும்

### 1. செய்யுளிசை அளபெடை அல்லது இசைநிறை அளபெடை

ஓஒதல்

### 2. இன்னிசை அளபெடை

கொடுப்பதூஉம்

### 3. சொல்லிசை அளபெடை

உரனசைஇ

இயல் : 1-2

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## உளிரளபெடை வருமிடம்
### சொல்லுக்கு

- **முதலில் வரும்**
  - ஓஒதல்
- **இடையில் வரும்**
  - கொடுப்பதூஉம்
- **இறுதியில் வரும்**
  - உரனசைஇ

## ஒற்றளபெடை வருமிடம்
### சொல்லுக்கு

- **முதலில் வராது**
  - X
- **இடையில் வரும்**
  - இலங்ங்கு
- **இறுதியில் வரும்**
  - மடங்ங் (மடம்)

இயல் : 1-3

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இனிக்கும் இலக்கணம் - இலக்கண வரைபடங்கள்

## மூவகை மொழிகள்

- **தனிமொழி** – மலர்
- **தொடர்மொழி** – மலர் வந்தாள்
- **பொதுமொழி** – பலகை, பல+கை

## பெயர்கள்

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர் (உறுப்புபெயர்)
5. குணப்பபெயர் (அ) பண்புப்பெயர்
6. தொழிற்பெயர்

## தொழிற்பெயர்

இரு வகைப்படும்

- **முதனிலைத் தொழிற்பெயர்** – பெறு, விடு
- **முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்** – பேறு, வீடு

இயல் : 1-4

## இயல் - 2

### தொகைநிலைத்தொடர்கள்

ஆறு வகைப்படும்

| வகை | எடுத்துக்காட்டு |
|---|---|
| 1. வேற்றுமைதொகை | வேலூர் சென்றார் |
| 2. வினைத்தொகை | வீசு தென்றல் |
| 3. பண்புத்தொகை | கரும்பலகை |
| 4. உவமைத்தொகை | மலர்க்கை |
| 5. உம்மைத்தொகை | நீ நான் |
| 6. அன்மொழித்தொகை | சிவப்புச் சட்டை பேசினார் |

இயல் : 2-1

## இயல் - 3

### தொகாநிலைத் தொடர்கள்

ஒன்பது வகைப்படும்

| | |
|---|---|
| 1. எழுவாய்த் தொடர் | இனியன் கவிஞர் |
| 2. விளித்தொடர் | நண்பா எழுதுக! |
| 3. வினைமுற்றுத்தொடர் | பாடினான் கண்ணன் |
| 4. பெயரெச்சத்தொடர் | கேட்ட பாடல் |
| 5. வினையெச்சத் தொடர் | பாடி மகிழ்ந்தார் |
| 6. வேற்றுமைத்தொடர் | செய்யுளைப் படித்தான் |
| 7. இடைச்சொல் தொடர் | மற்றொன்று |
| 8. உரிச்சொல் தொடர் | மாமன்னர் |
| 9. அடுக்குத்தொடர் | வாழ்க! வாழ்க! |



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## இயல் - 4









செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## பத்தாம் வகுப்பு (2020 - 2021)

## இனிக்கும் இலக்கணம் - இலக்கண வரைபடங்கள்




இயல் : 4-2

# இனிக்கும் இலக்கணம் – இலக்கண வரைபடங்கள்

## வழு

ஏழு வகைப்படும்

| வகை | எடுத்துக்காட்டு |
|---|---|
| 1. திணைவழு | செழியன் வருவது |
| 2. பால்வழு | கண்ணகி வந்தான் |
| 3. இடவழு | நீ வந்தேன் |
| 4. காலவழு | நேற்று வருவான் |
| 5. வினாவழு | ஒரு விரலைக் காட்டி சிறியதா? பெரியதா? |
| 6. விடைவழு | கண்ணன் எங்கே? கண்ணாடி பைக்குள்? |
| 7. மரபுவழு | தென்னந்தோப்பை தென்னந்தோட்டம் |

இயல் : 4-3

# வழாநிலை

ஏழு வகைப்படும்

| வகை | எடுத்துக்காட்டு |
|---|---|
| 1. திணைவழாநிலை | செழியன் வந்தான் |
| 2. பால்வழாநிலை | கண்ணகி வந்தாள் |
| 3. இடவழாநிலை | நீ வந்தாய் |
| 4. காலவழாநிலை | நேற்று வந்தான் |
| 5. வினாவழாநிலை | ஒரு விரலில் எது சிறியது? பெரியது? |
| 6. விடைவழாநிலை | கண்ணன் எங்கே? வீட்டிற்குள் இருக்கிறான்? |
| 7. மரபுவழாநிலை | தென்னந்தோப்பு |

இயல் : 4-4

# வழுவமைதி

ஐந்து வகைப்படும்

| வகை | எடுத்துக்காட்டு |
| --- | --- |
| 1. திணைவழுவமைதி | பசுவை, என் அம்மைவந்தாள் |
| 2. பால்வழுவமைதி | மகளை, வாடா இராசா, வாடா கண்ணா |
| 3. இடவழுவமைதி | இந்தமாறன், ஒருநாளும் பொய் கூறமாட்டான் |
| 4. காலவழுவமைதி | தலைவர், நாளை பள்ளிக்கு வருகிறார் |
| 5. மரபுவழுவமைதி | குயில் கூவும் என்பது மரபு, குயில் கத்தும் |

இயல் : 4-5

## இயல் - 5

### வினா
ஆறு வகைப்படும்

| | |
|---|---|
| 1. அறிவினா | ஆசிரியர் மாணவனிடம் வினவுவது, 'அறம்' என்பதன் பொருள் யாது? |
| 2. அறியாவினா | மாணவர் ஆசிரியரிடம் வினவுவது, 'அறம்' என்பதன் பொருள் யாது? |
| 3. ஐயவினா | அங்கு இருப்பது 'ஆடா? மாடா?' |
| 4. கொளல்வினா | நூலகரிடம், பெரியார் நூல் இருக்கிறதா? |
| 5. கொடைவினா | நண்பரிடம், எழுதுகோல் வேண்டுமா? |
| 6. ஏவல்வினா | மகனிடம், வீட்டுப்பாடம் முடிக்கவில்லையா? |



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# இனிக்கும் இலக்கணம் – இலக்கண வரைபடங்கள்

## விடை
எட்டு வகைப்படும்

| | |
|---|---|
| 1. சுட்டுவிடை | பள்ளிக்கு வழி யாது? என்றால் 'இது' அல்லது 'அது' |
| 2. மறைவிடை | இது செய்வாயா? என்றால் 'செய்யமாட்டேன்' |
| 3. நேர்விடை | இது செய்வாயா? என்றால் 'செய்வேன்' |
| 4. ஏவல்விடை | இது செய்வாயா? என்றால் 'நீயே செய்' |
| 5. வினாஎதிர்வினாதல் விடை | இது செய்வாயா? என்றால் 'செய்யாமல் இருப்பேனா?' |
| 6. உற்றது உரைத்தல் விடை | இது செய்வாயா? என்றால் 'கால் வலிக்கிறது' |
| 7. உறுவது கூறல் விடை | இது செய்வாயா? என்றால் 'கால் வலிக்கும்' |
| 8. இனமொழி விடை | கதை எழுதுகிறாயா? என்றால் 'கவிதை எழுதுகிறேன்' |

இயல் : 5-2

செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## பத்தாம் வகுப்பு (2020 - 2021)

# இனிக்கும் இலக்கணம் – இலக்கண வரைபடங்கள்

## பொருள்கோள்

எட்டு வகைப்படும்

1. ஆற்றுநீர்ப் பொருள்கோள்
   - மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
     நிலமிசை நீடுவாழ் வார்.
2. மொழிமாற்றுப் பொருள்கோள்
3. நிரல்நிறைப் பொருள்கோள்
   - அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
     பண்பும் பயனும் அது.
     முறைநிரல்நிறைப் பொருள்கோள்
   - விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
     கற்றாரோடு ஏனை யவர்.
     எதிர்நிரல்நிறைப் பொருள்கோள்
4. விற்பூட்டுப் பொருள்கோள்
5. தாப்பிசைப் பொருள்கோள்
6. அளைமறிப்பாப்புப் பொருள்கோள்
7. கொண்டுகூட்டுப் பொருள்கோள்
   - ஆலத்து மேல குவளை குளத்துள
     வாலின் நெடிய குரங்கு.
8. அடிமறிமாற்றுப் பொருள்கோள்

இயல் : 5-3

## இயல் - 6

# அகப்பொருள் இலக்கணம்

**அகத்திணை**
ஏழு வகைப்படும்

- குறிஞ்சித்திணை
- முல்லைத்திணை
- மருதத்திணை
- நெய்தல்திணை
- பாலைத்திணை
- கைக்கிளை
- பெருந்திணை

**அன்பின்**
ஐந்திணைகள்

- குறிஞ்சி
- முல்லை
- மருதம்
- நெய்தல்
- பாலை

**ஐந்திணைக்கு உரிய பொருள்கள் மூன்று**

- முதற்பொருள்
- கருப்பொருள்
- உரிப்பொருள்

இயல் : 6-1




| நிலம் ஐந்து வகைப்படும் | |
|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடம். |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடம். |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடம். |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடம். |
| பாலை | சுரமும் சுரம் சார்ந்த இடம். |

இயல் : 6-2

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## பத்தாம் வகுப்பு (2020 - 2021)

## இனிக்கும் இலக்கணம் - இலக்கண வரைபடங்கள்




**சிறுபொழுது**

ஒரு நாளின் ஆறு கூறுகள்

**பெரும்பொழுது**

ஓராண்டின் ஆறு கூறுகள்




இயல் : 6-3


**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

| திணையும் பொழுதும் | | |
|---|---|---|
| **திணை** | **பெரும்பொழுது** | **சிறுபொழுது** |
| **குறிஞ்சி** | குளிர், முன்பனி. | யாமம் |
| **முல்லை** | கார் | மாலை |
| **மருதம்** | கார், குளிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில். | வைகறை |
| **நெய்தல்** | கார், குளிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில். | எற்பாடு |
| **பாலை** | இளவேனில், முதுவேனில், பின்பனி. | நண்பகல் |

குறிஞ்சி பாலை முல்லை மருதம்
நெய்தல் ஐந்திணைக்கு எய்திய பெயரே (ந.அ.பொ : 6)

முதற்பொருள்[1] கருப்பொருள்[2] உரிப்பொருள்[3] எனமுறை
நுதற்பொருள் மூன்றினும் நுவலப் படுமே. (ந.அ.பொ : 7)

நிலமும் பொழுதும்என முதல்இரு வகைத்தே. (ந.அ.பொ : 8)

வரையே சுரமே புறவே பழனம்
திரையே அவைஅவை சேர்தருத் இடனே
எனஈர் ஐவகைத்து அனையியல் நிலமே. (ந.அ.பொ : 9)



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## குறிஞ்சி - கருப்பொருள்கள்




| | | | |
|---|---|---|---|
| தெய்வம் | : **முருகன்** | பூ | : **குறிஞ்சி, காந்தள்** |
| மக்கள் | : **குறவர், குறத்தியர்** | பறவை | : **மயில், கிளி** |
| விலங்கு | : **புலி, சிங்கம்** | தொழில் | : **தேனெடுத்தல்** |

இயல் : 6-5

## முல்லை - கருப்பொருள்கள்




| | | | | | |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | : | **திருமால்** | பூ | : | **முல்லை, தோன்றி** |
| மக்கள் | : | **ஆயர், ஆய்ச்சியர்** | பறவை | : | **காட்டுக்கோழி, மயில்** |
| விலங்கு | : | **மான், முயல்** | தொழில் | : | **நிரை மேய்த்தல்** |

இயல் : 6-6

## மருதம் - கருப்பொருள்கள்




| | | | | | |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | : | **இந்திரன்** | பூ | : | **செங்குழுநீர், தாமரை** |
| மக்கள் | : | **உழவர், உழத்தியர்** | பறவை | : | **நாரை, நீர்கோழி** |
| விலங்கு | : | **எருமை, நீர் நாய்** | தொழில் | : | **நெல்லரித்தல்** |

இயல் : 6-7

## பத்தாம் வகுப்பு (2020 - 2021)

# இனிக்கும் இலக்கணம் - இலக்கண வரைபடங்கள்

### நெய்தல் - கருப்பொருள்கள்




| | | | |
|---|---|---|---|
| தெய்வம் : | **வருணன்** | பூ : | **தாழை, நெய்தல்** |
| மக்கள் : | **பரதர், பரத்தியர்** | பறவை : | **கடற்காகம்** |
| விலங்கு : | **சுறா, முதலை** | தொழில் : | **மீன்பிடித்தல்** |

இயல் : 6-8

## பாலை - கருப்பொருள்கள்




| | | | |
|---|---|---|---|
| தெய்வம் | : **கொற்றவை** | பூ | : **குரவம், பாதிரி** |
| மக்கள் | : **எயினர், எயிற்றியர்** | பறவை | : **புறா, பருந்து** |
| விலங்கு | : **யானை** | தொழில் | : **வழிப்பறி** |

இயல் : 6-9

## இயல் - 7

# புறப்பொருள் இலக்கணம்

**புறத்திணைகள்**
பன்னிரண்டு

| | |
|---|---|
| **வெட்சித்திணை** | பகைவர் ஆநிரைகளைக் கவர்வது |
| **கரந்தைத்திணை** | பகைவர் கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்டு வருவது |
| **வஞ்சித்திணை** | பகைவர் நாட்டைக் கைப்பற்ற கருதியது |
| **காஞ்சித்திணை** | தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனைத் தடுத்துப் போரிடல் |
| **நொச்சித்திணை** | பகைவர் உள்ளே நுழையாதவாறு மதிலைக் காப்பது |
| **உழிஞைத்திணை** | பகைவர் மதிலை நாற்புறமும் வளைத்துக் கைப்பற்றுதல் |
| **தும்பைத்திணை** | அரசர்கள் இருவரும் எதிர் எதிரே நின்று போர் புரிவது |
| **வாகைத்திணை** | அரசர், தன் பகைவரை வெல்லுதல் |
| **பாடாண்திணை** | மன்னனின் கல்வி, வீரம், புகழ், அருள் முதலியவற்றைப் போற்றிக் கூறுவது |
| **பொதுவியல்திணை** | வெட்சி முதல் பாடாண் வரை கூறாத பொதுவான கருத்துகளைக் கூறுவது |
| **கைக்கிளை** | ஒருதலைக் காமம். ஆண்பாற்கூற்று, பெண்பாற்கூற்று. |
| **பெருந்திணை** | பொருந்தாக் காமம். பெண்பாற்கூற்று, இருபாற்கூற்று. |



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

# அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

## பத்தாம் வகுப்பு (2020 - 2021)

## இனிக்கும் இலக்கணம் - இலக்கண வரைபடங்கள்

- **மதில்போர்த்திணைகள்**
  - நொச்சித்திணை
  - உழிஞைத்திணை

- **அகம், புறம் - பொதுதிணை**
  - கைக்கிளை
  - பெருந்திணை

- **ஆநிரைத்திணைகள்**
  - வெட்சித்திணை
  - கரந்தைத்திணை

- **எதிரெதிர்த்திணைகள்**
  - வெட்சி x கரந்தை
  - நொச்சி x உழிஞை
  - வஞ்சி x காஞ்சி

- **பூக்கள் இல்லாப் புறத்திணைகள்**
  - பாடாண்திணை
  - பொதுவியல்
  - கைக்கிளை
  - பெருந்திணை

இயல் : 7-2

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## இயல் - 8

## பா - வகை அலகிடுதல்

| யாப்பு - வேறு பெயர்கள் |
| --- |
| செய்யுள், தூக்கு, தொடர்பு, பாட்டு, பா. |

| யாப்பு - உறுப்புகள் |
| --- |
| எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை. |

| பா - வகைகள் |
| --- |
| வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிபா. |

### பாவுக்குரிய ஓசைகள்

| பா | ஓசை |
| --- | --- |
| வெண்பா | செப்பல் |
| ஆசிரியப்பா | அகவல் |
| கலிப்பா | துள்ளல் |
| வஞ்சிப்பா | தூங்கல் |



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

### பத்தாம் வகுப்பு (2020 - 2021)

### இனிக்கும் இலக்கணம் - இலக்கண வரைபடங்கள்

**வெண்பா**
ஐந்து வகைப்படும்

1. குறள் வெண்பா
2. சிந்தியல் வெண்பா
3. நேரிசை வெண்பா
4. இன்னிசை வெண்பா
5. பஃறொடை வெண்பா

**ஆசிரியப்பா**
நான்கு வகைப்படும்

1. நேரிசை ஆசிரியப்பா
2. இணைக்குறள் ஆசிரியப்பா
3. நிலைமண்டில ஆசிரியப்பா
4. அடிமறி மண்டில ஆசிரியப்பா

**ஓர் அசைச்சீர்கள்**
நான்கு வகைப்படும்

| | | |
|---|---|---|
| நேர் | - | நாள் |
| நிரை | - | மலர் |
| நேர்பு | - | காசு |
| நிரைபு | - | பிறப்பு |

**ஈரசைச்சீர்கள்**
நான்கு வகைப்படும்

| | | | |
|---|---|---|---|
| தே நேர் | மா நேர் | புளி நிரை | மா நேர் |
| கரு நிரை | விளம் நிரை | கூ நேர் | விளம் நிரை |

இயல் : 8-2

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, அரக்கோணம். இராணிப்பேட்டை மாவட்டம்.

**பத்தாம் வகுப்பு (2020 - 2021)**

# இனிக்கும் இலக்கணம் - இலக்கண வரைபடங்கள்

## காய்ச்சீர்கள்

நான்கு வகைப்படும்

| | | |
|---|---|---|
| தே<br>நேர் | மாங்<br>நேர் | காய்<br>நேர் |
| புளி<br>நிரை | மாங்<br>நேர் | காய்<br>நேர் |
| கரு<br>நிரை | விளங்<br>நிரை | காய்<br>நேர் |
| கூ<br>நேர் | விளங்<br>நிரை | காய்<br>நேர் |

## கனிச்சீர்கள்

நான்கு வகைப்படும்

| | | |
|---|---|---|
| தே<br>நேர் | மாங்<br>நேர் | கனி<br>நிரை |
| புளி<br>நிரை | மாங்<br>நேர் | கனி<br>நிரை |
| கரு<br>நிரை | விளங்<br>நிரை | கனி<br>நிரை |
| கூ<br>நேர் | விளங்<br>நிரை | கனி<br>நிரை |

இயல் : 8-3

**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## யாப்பு - பொது இலக்கணம்

| வெண்பா | இலக்கணம் | ஆசிரியப்பா |
|---|---|---|
| **செப்பல்** ஓசை உடையது | **ஓசை** | **அகவல்** ஓசை உடையது |
| **இயற்சீர், வெண்சீர்** வரும் | **சீர்** | **ஆசிரிய உரிச்சீர்கள்** வரும் |
| **இயற்சீர் வெண்டளை**யும் **வெண்சீர் வெண்டளை**யும் வரும் | **தளை** | **நேரொன்றாசிரியத்தளையும் நிரையொன்றாசிரியத்தளையும்** வரும் |
| **இரண்டடி முதல் பன்னிரண்டடி** வரை | **அடி** | **மூன்றடி முதல் பல அடிகள்** வரை |
| **நாள், மலர், காசு, பிறப்பு** | **முடிப்பு** | **ஏகாரத்தில்** முடிவது சிறப்பு |
| **ஐந்து வகைப்படும்** | **வகை** | **நான்கு வகைப்படும்** |

இயல் : 8-4

## குறள் வெண்பா இலக்கணம்

| | |
|---|---|
| ஓசை | **செப்பல்** ஓசை உடையது |
| சீர் | **இயற்சீர், வெண்சீர்** வரும் |
| தளை | **இயற்சீர் வெண்டளை**யும், **வெண்சீர் வெண்டளை**யும் வரும் |
| அடி | **இரண்டடி** மட்டும் வரும். **முதலடி நாற்சீர், ஈற்றடி முச்சீர்** |
| முடிப்பு | **நாள், மலர், காசு, பிறப்பு** வாய்ப்பாட்டில் ஒன்றில் முடியும் |
| வகை | **ஒரு விகற்பம்** குறள்வெண்பா, **இரு விகற்பம்** குறள்வெண்பா |
| எ.கா. | முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை<br>இன்மை புகுத்தி விடும். |

இயல் : 8-5

## பா - வகை அலகிடுதல் அசை - இருவகைப்படும்

| நேரசை | | | நிரையசை | | |
|---|---|---|---|---|---|
| மாத்திரை : 1 - குறில், 2 - நெடில், ● - ஒற்று | | | | | |
| 1 குறில் தனித்து வரும் | : நேர் | ப | 1+1 இரு குறில் இணைந்து வரும் | : நிரை | பல |
| 1· குறில் ஒற்று வரும் | : நேர் | பல் | 1+1· இருகுறில் இணைந்து ஒற்று வரும் | : நிரை | பலர் |
| 2 நெடில் தனித்து வரும் | : நேர் | பா | 1+2 குறில் நெடில் இணைந்து வரும் | : நிரை | கலா |
| 2· நெடில் ஒற்று வரும் | : நேர் | பால் | 1+2· குறில் நெடில் இணைந்து ஒற்று வரும் | : நிரை | கலாம் |

அரு ளொடும் — 1+1 1+1· — நிரை நிரை — கருவிளம்

அன் பொடும் — 1· 1+1· — நேர் நிரை — கூவிளம்

வா ராட் — 2 2· — நேர் நேர் — தேமா

பொரு ளாக் கம் — 1+1 2· 1· — நிரை நேர் நேர் — புளிமாங்காய்

புல் லார் — 1· 2· — நேர் நேர் — தேமா

புர ள — 1+1 1 — நிரை நேர் — புளிமா

விடல் — 1+1· — நிரை — மலர்

இக்குறட்பா மலர் என்னும் வாய்ப்பாட்டில் முடிந்தது

இயல் : 8-6

## இயல் - 9

## அணி (அழகு) உவமையணி

செய்யுளில் **உவமை**, **உவமேயம்**, **உவமஉருபு** ஆகிய மூன்றும் **வெளிப்படையாக வருவது** உவமையணி ஆகும்.

எ.கா. 1. **வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்**
**கோலொடு நின்றான் இரவு**

இக்குறட்பாவில் **வேலொடு நின்றான் இடுவென்றது** என்பது **உவமை**. **கோலொடு நின்றான் இரவு** என்பது **உவமேயம்**. **போலும்** என்பது **உவமஉருபு**. எனவே, இது **உவமையணி** ஆகும்.

---

எ.கா. 1. **வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்**
**கோலொடு நின்றான் இரவு**

**உவமை** : **வேலொடு நின்றான் இடுவென்றது**
**உவமேயம்** : **கோலொடு நின்றான் இரவு**
**உவமஉருபு** : **போலும்**. எனவே, இது **உவமையணி** ஆகும்.



**செ. பன்னீர் செல்வம்,** தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## அணி (அழகு) உவமையணி

செய்யுளில் **உவமை**, **உவமேயம்**, **உவமஉருபு** ஆகிய மூன்றும் **வெளிப்படையாக வருவது** உவமையணி ஆகும்.

எ.கா. 2. **மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
**ஒப்பாரி யாம்கண்ட தில்.**

இக்குறட்பாவில் **ஒப்பாரி யாம்கண்ட தில்** என்பது **உவமை.**
**மக்களே போல்வர் கயவர் அவர்** என்பது **உவமேயம்.**
**அன்ன** என்பது **உவமஉருபு.** எனவே, இது **உவமையணி** ஆகும்.

---

எ.கா. 2. **மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
**ஒப்பாரி யாம்கண்ட தில்.**

**உவமை** : **ஒப்பாரி யாம்கண்ட தில்**
**உவமேயம்** : **மக்களே போல்வர் கயவர் அவர்**
**உவமஉருபு** : **அன்ன** எனவே, இது **உவமையணி** ஆகும்.

இயல் : 9-2

## அணி (அழகு) உவமையணி

செய்யுளில் **உவமை, உவமேயம், உவமஉருபு** ஆகிய மூன்றும் **வெளிப்படையாக வருவது** உவமையணி ஆகும்.

எ.கா. 3. **சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்**
**கொல்லப் பயன்படுவர் கீழ்.**

இக்குறட்பாவில் **கரும்பு கொல்லப் பயன்படுவர் கீழ்** என்பது **உவமை.** **சொல்லப் பயன்படுவர் சான்றோர்** என்பது **உவமேயம்,** **போல்** என்பது **உவமஉருபு.** எனவே, இது **உவமையணி** ஆகும்.

---

எ.கா. 3. **சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்**
**கொல்லப் பயன்படுவர் கீழ்.**

**உவமை** : **கரும்பு கொல்லப் பயன்படுவர் கீழ்**
**உவமேயம்** : **சொல்லப் பயன்படுவர் சான்றோர்**
**உவமஉருபு** : **போல்.** எனவே, இது **உவமையணி** ஆகும்.



செ. பன்னீர் செல்வம், தமிழாசிரியர், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம்.

## அணி (அழகு) உவமையணி

செய்யுளில் **உவமை**, **உவமேயம்**, **உவமஉருபு** ஆகிய மூன்றும் **வெளிப்படையாக வருவது** உவமையணி ஆகும்.

எ.கா. 4. **நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தற்று**

இக்குறட்பாவில் **நடுஊருள் நச்சு மரம் பழுத்து** என்பது **உவமை.**
**நச்சுப்படாதவன் செல்வம்** என்பது **உவமேயம்,**
**அற்று** என்பது **உவமஉருபு.** எனவே, இது **உவமையணி** ஆகும்.

---

எ.கா. 4. **நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தற்று**

**உவமை** : **நடுஊருள் நச்சு மரம் பழுத்து**
**உவமேயம்** : **நச்சுப்படாதவன் செல்வம்**
**உவமஉருபு** : **அற்று.** எனவே, இது **உவமையணி** ஆகும்.

இயல் : 9-4

## அணி (அழகு) உவமையணி

செய்யுளில் **உவமை**, **உவமேயம்**, **உவமஉருபு** ஆகிய மூன்றும் **வெளிப்படையாக வருவது** உவமையணி ஆகும்.

எ.கா. 5. **குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை.**

இக்குறட்பாவில் **குன்றேறி யானைப்போர் கண்டு** என்பது **உவமை.**
**தன்கைத்தொன்றுண்டாகச் செய்வான் வினை** என்பது **உவமேயம்.**
**அற்று** என்பது **உவமஉருபு** எனவே, இது **உவமையணி** ஆகும்.

---

எ.கா. 5. **குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை.**

**உவமை** : **குன்றேறி யானைப்போர் கண்டு**
**உவமேயம்** : **தன்கைத்தொன்றுண்டாகச் செய்வான் வினை**
**உவமஉருபு** : **அற்று.** எனவே, இது **உவமையணி** ஆகும்.

இயல் : 9-5

## அணி (அழகு) எடுத்துக்காட்டு உவமையணி

செய்யுளில் **உவமை** ஒரு தொடராகவும், **உவமேயம்** ஒரு தொடராகவும் வந்து, இடையில் **அதுபோல** என்ற **உவமஉருபு மறைந்து வந்தால்** அது **எடுத்துக்காட்டு உவமையணி** ஆகும்.

எ.கா. **பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல்** **கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்.**

இக்குறட்பாவில் **பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல்** என்பது **உவமை**
**கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண்** என்பது **உவமேயம்**
இவற்றுக்கிடையே **அதுபோல** என்ற **உவமஉருபு மறைந்து வருவதால்**
இது **எடுத்துக்காட்டு உவமையணி** ஆகும்.

---

எ.கா. **பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல்** **கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்.**

**உவமை** : **பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல்**
**உவமேயம்** : **கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண்**
**"அதுபோல" உவமஉருபு மறைந்து வருவதால்,**
இது **எடுத்துக்காட்டு உவமையணி** ஆகும்.

இயல் : 9-6

## அணி (அழகு) சொற்பொருள் பின்வருநிலை அணி

செய்யுளில் **ஒரு சொல் பல முறை வந்து ஒரே பொருளைத் தருவது**
**சொற்பொருள் பின்வருநிலை அணி** ஆகும்.

எ.கா. 1. **பொருளல்ல வரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்ல தில்லை பொருள்.** (பொருள்=செல்வம்)

இக்குறட்பாவில் **பொருள்** என்ற சொல் பலமுறை வந்து **செல்வம்**
என்ற **ஒரே பொருளைத் தருவதால்**
இது **சொற்பொருள் பின்வருநிலை அணி** ஆகும்.

இயல் : 9-6

## அணி (அழகு) சொற்பொருள் பின்வருநிலை அணி

செய்யுளில் **ஒரு சொல் பல முறை வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலை அணி** ஆகும்.

எ.கா. 2. **இன்மை**யின் இன்னாதது யாதெனில் **இன்மை**யின்
**இன்மை**யே இன்னா தது. (இன்மை=வறுமை)

இக்குறட்பாவில் **இன்மை** என்ற சொல் பலமுறை வந்து **வறுமை** என்ற **ஒரே பொருளைத் தருவதால்** இது **சொற்பொருள் பின்வருநிலை அணி** ஆகும்.

இயல் : 9-7